www.tamilarangam.net

TELO

# விடியல்

ரெலோவின் அரசியல் ஏடு

விடியல் 1 கதிர் 10. ஏப்ரல் - 1986.

0 ஐ. நா. சபை மனித உரிமைக் கழக மாநாடு

0 ஐ. நா. சபை இனவெறி ஒழிப்புக் கமிட்டி மாநாடு

0 சிறீலங்காவுக்கு உதவியளிக்கும் நாடுகள் மாநாடு

0 இந்தியாவின் கண்டிப்பு

## இவற்றின் எதிரொலிகளே

0 போர் விமானத் தாக்குதல் இடை நிறுத்தப்படும்

-லலித்

0 இனப்பிரச்சனைக்கு தீர்வு காணவேண்டியது அவசரமானது.

-ரணதுங்க

0 தமிழர்கள் நாடு திரும்பலாம்

A. C. S. ஹமீது

''இது ஒரு இராணுவ ரீதியான பிரச்சனை; இதனை இராணுவ ரீதியில் தான் பைசல் செய்வோம்'' என கூறி வந்த சிறீ லங்கா ஆட்சியாளர்கள் மீண்டும் அரசியல் ரீதியில் பேச்சுவார்த்தை சமாதான வழியில் தீர்வு என புலம்பத் தொடங்கிவிட்டார்கள்.

தமிழர் பகுதிகள் மீது நடைபெறும் விமானப்படைத் தாக்குதல் 15-03-1986 தொடக்கம் ஒருவாரகாலம் இடை நிறுத்தப்படும் எனவும்-போராளிகளின் தாக்குதலும் இடை நிறுத்தப்பட்டால் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கலாம் எனவும் இந்தியாவில் உள்ள தமிழ் அகதிகள் 15-03-1986 தொடக்கம் தாயகம் திரும்பலாம் எனவும் கடந்த 13-03-1986ல் சிறீலங்காவின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி அறிவித்தார்.

சிறீலங்காவின் முப்படைகளின் கூட்டு நடவடிக்கைக் குழுவின் தலைமை கமாண்டர் சிரில்ரணதுங்க அண்மையில் வீரகேசரி பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் ''இலங்கை இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணவேண்டியது அவசிய

போராட்டம் எமது பாதை! விடுதலை எமது இலக்கு!! சமதர்மம் எமது வேட்கை!!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடிவை நோக்கி...

ஏகாதிபத்தியத்தின் ஏகத் தலைவனுன அமெரிக்கா தனது பொருளாதார நெருக்கடியை சமாளிக்க - சந்தை வாய்ப்பை கைப்பற்றிக் கொள்ள அன்று கோழிக்குஞ்சு நாடான கிரெனடாவை ஆக்கிரமித்தான்.

இன்று லிபியாவை ஆக்கிரமிக்க அந்நாட்டின் மீது குண்டு வீச்சுத் தாக்குதல் நடைபெறுகிறது. அமெரிக்க ஏகாதிபத்தியம் லிபிய நாட்டின் மீது வீசிய குண்டுவீச்சில் பலர் கொல்லப்பட்டதோடு - ஏவுகணை கப்பல் ஒன்றும் நாசமாக்கப்பட்டுள்ளது.

லிபிய அதிபர் கடாபியை கொல்ல 1981ம் தொடக்கமே அமெரிக்கா திட்டம் தீட்டியது. கடாஃபி பேருரையாற்றும் பொதுக்கூட்டத்தில் கொலையாளியை நுழைக்கும் திட்டம்" உணவில் விஷம் கலக்கும் திட்டம் எல்லாமே அவர்களின் எண்ணத்தை நிறைவேற்றவில்லை

லிபியாமீது ஆக்கிரமிப்பை தொடுக்க சாக்கு போக்கை எதிர்நோக்கியிருக்கும் அமெரிக்காவுக்கு வியன்னுவிலும், ரோமிலும் தீவிரவாதிகள் மேற்க்கொண்ட தாக்குதலில் 5 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டது வாய்ப்பாகிவிட்டது.

5 அமெரிக்கர் கொல்லப்பட்டதற்கு ஆத்திரப்பட்டார் றீகன். 5 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டதால் பொங்கி வந்த ஆத்திரமல்ல இது. தமது சந்தை வாய்ப்புக்கள் பறிபோகின்றன என்பது தான் - தமது ஏகாதிபத்திய சூழ்ச்சிகள் அம்பலப்படுத்தப்படுகின்றன என்பது தான்.

ஐந்து அமெரிக்கர்கள் கொல்லப்பட்டதற்கு ஆத்திரப்படும் றீகன் தான் தன் சொந்த நாட்டிலேயே ஆயிரக் கணக்கான அமெரிக்கர்களை கொன்று குவிக்கிருன். ஏகாதிபத்திய முதலைகளை பன்னுட்டு மூலதனக் கொள்ளைகளை எதிர்பவர்களை, அம்பலப்படுத்துகிறவர்களை தீர்த்துக் கட்டுகிருன்.

இப்படியான, மக்கள் விரோதிகள் தமது நயவஞ்சக திட்டத்தை செயல்படுத்துவதற்காக சாக்குப் போக்கு கூறுகிருர்கள்.

இந்த யுத்த வெறியாளர்களுக்கு எதிராக மனித சமுதாயம் போராட வேண்டும். யுத்த வெறி பிடித்து அலைகின்ற அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உலக மக்கள் போராட வேண்டும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை தோற்கடிக்க போராடுகின்ற தமிழ் ஈழ மக்களுக்கு உலக மனித சமுதாயம் உதவி செய்ய வேண்டும். அதிலும் குறிப்பாக இந்தியா. இந்தியாவையும் அடிபணிய வைக்க அமெரிக்கா திட்டம் தீட்டுகின்ற இவ்வேளையில், அமெரிக்காவை விரட்டி போராடுகின்ற தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களை இந்தியா அங்கீகரிக்க வேண்டும்.

---

தொடர்புகட்கு —

S. தயானந்தன்.
82. குமரன் நகர்.
சிறீஐயப்ப நகர்.
சென்னை - 600 111.

மானது மட்டுமல்ல; அவசரமானது" என்றும்— "இனப்பிரச்சனைக்கு அரசியல்வாதிகளே காரணம்" எனவும் கூறினர்.

நாடுநாடாக பிச்சைப் பாத்திரம் ஏந்திவரும் சிறீலங்கா வெளியுறவு அமைச்சர் A.C S. ஹமீது சுவிஸ்சிலாந்தில் நிருபர்கள் மத்தியில் பேசும் போது "சுவிஸ்சிலாந்து நாட்டில் குடியேறுவதற்காக புகலிடம் கோரியுள்ள இலங்கைத் தமிழர்கள் இலங்கைக்கு எப்போது வேணடுமானுலும் திரும்பி வரலாம்; இலங்கை அவர்களை ஏற்றுக் கொள்ளும்; அதில் பிரச்சனை ஏதும் இல்லை" என்று கூறியதோடு 'வேலை தேடுவதற்காகவே இலங்கைத் தமிழர்கள மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளுக்கு வருகின்றனர் என்றும், அவர்களது நோக்கம் பொருளாதார அடிப்படையிலானது தான் என்றும், அரசியல் அடிப்படையிலானது இல்லை என்றும் இலங்கையில் அரசியல் ரீதியாக ஒடுக்கப்படுவதாக கூறினுல் வேலைவாய்ப்பு கிடைக்குமென்ற நம்பிக்கையிலேயே அப்படிக் கூறுவதாகவும்" குறிப்பிட்டார்

இப்படியாக, இனப்பிரச்சனைக்கு அரசியல் ரீதியாக தீர்வு காண வேண்டும் என்று துடிப்பவர்கள் தமிழர் விடுதலைக் கூடடணியால் (TULE) அனுப்பிவைக்கப்பட்ட குறைந்தபட்ச கோரிக்கைகளுக்கு கூட ஏன் சம்மதம் தெரிக்கவில்லை.

சம்மதம் தெரிவிக்காதது மட்டுமல்ல புதுடெல்லியோ, லண்டனே அல்லது வேறெந்த நாடுமோ என்ன சொல்கிறது என்பது பற்றி எங்களுக்கு அக்கறையில்லை "போராளிகளை" எவ்வளவு சீக்கிரமாக ஒடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக ஒடுக்குவோம் என கொக்கரித்தார்கள்.

இதுமட்டுமல்ல. தமிழ் பேசும் மக்கள் மீதான பேரினவாத ஒடுக்குமுறைகளை நாளுக்கு நாள் அதிகரித்தே வந்தார்கள். அதாவது, தமிழர்களது இருப்பிடங்கள் மீது போர் விமானத் தாக்குதலை நிகழ்த்திஞர்கள்; நிகழ்த்துகிருர்கள். புதிய கடல் கண்காணிப்பு வலையத்தை அறிவித்தார்கள் தமிழர்களது விவ்சாய நிலங்கள் மீது குண்டு வீச்சுக்களை நடார்த்தி விளை நிலங்களை தரிசாக்கிஞர்கள். ஈழப் பகுதிகளுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் எரி பொருட்களையும் தடை செய தார்கள்.

இவ்வாருக, செயல்பபட்டவர்கள் பேச்சுவார்த்தைக்கு தற்போது அழைப்பு விடுவது ஒன்றும்புரியாத புதிரல்ல.

ஐக்கிய நாடுகள் சபையின்; மனித உரிமைக் கமிட்டியும்-இனவெறி ஒழிப்புக் கமிட்டியும் "இலங்கையில் நடப்பது !இனப் படுகொலை" என கண்டனம் செய்ததும்-இந்தியா பலமுறை கண்டிப்பான எச்சரிக்கை விடுத்ததும்-எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவியளிக்கும் நாடுகளின் மாநாடுமே காரணமாகும்.

## மனித உரிமைக் கமிஷனின்

## கண்டனம்

கடந்த மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கமிஷன் மாநாட்டிலும்-ஐக்கிய நாடுகள் சபை இனவெறி ஒழிப்புக் கமிட்டி மாநாட்டிலும் பல உலக நாடுகள் ஜெயவர்த்தனு அரசாங்கத்திற்கு எதிரான கண்டனத்தை தெரிவித்தன. இதையடுத்து கடந்த 08-03-1986ல் பேசிய உலக மனித உரிமை பாதுகாப்பு அமைப்பின் பிரதிநிதி டேனிஸ் வான்டெர் "இலங்கையில் சிறுபான்மை தமிழர்கள் மீது வன்முறை பரவி வருகிறது; ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு இதை கவனிக்க வேண்டும்; அங்கு இராணுவ ஆதிக்கம் மேலோங்கி வருகிறது கடந்த ஒரு ஆண்டு காலமாக இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் வன்முறையால் நசுக்கப்படுகிறது: எங்கள் இயக்கம் மற்ற அமைப்புக்களுடன் சேர்ந்து இந்த விஜயத்தில் அக்கறை செலுத்தும் "என்று குறிப்பிட்டார். மனித உரிமைக் கழகத்தின் வழக்கறிஞர் கரென் பார்கர் பேசும் போது "யாழ்ப்பாணத்தில் அப்பாவி தமிழர்கள் மீது விமானம் குண்டு வீசி உள்ளது; சர்வதேச சமுதாயம் இதை கடுமையாக கருத வேண்டும்" என்ருர்.

## இந்தியாவின் கண்டிப்பு...

அரசியல் ரீதியில் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என கூறிக் கொண்டு அப்பாவித் தமிழர்களை கொன்று குவிப்பதை இந்தியா வன்மையாக கண்டித்தது; கடந்த 04-03-1986ல் ராஜ்யசபையில் பேசிய இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி "இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அரசியல் ரீதியாக தீர்வு காண்பதில் தனக்கு அக்கறை இருப்பதாக இலங்கை அரசு வெறும் அறிவிப்புக்களை மட்டும் வெளியிடுவது போதாது; இந்த அறிவிப்புக்களை உண்மையாக்குவதற்கு இலங்கை அரசு செயல் திட்டங்களை உருவாக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்; கடந்த 11-03-1986ல் டெலிகிராப் என்ற பத்திரிகைக்கு ராஜீவ் காந்தி அளித்துள்ள பேட்டியில் "இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரங்கள் நீண்ட காலமாக நடந்து வருகிறது; இந்த பிரச்சனையில் உடனடி தீர்வு காண்பதில் இலங்கை அரசு மிகவும் காலதாமதம் காட்டுகிறது; எடுக்கும் நடவடிக்கைகளும் திருப்தி அளிப்பதாக இல்லை; தமிழர் பிரச்சனைக்கு உண்மையிலேயே தீர்வுகாண வேண்டும் என்று அவர்கள் நினைத்தால் உறுதியான அரசியல் தீர்வுக்கு "வரவேண்டும் என்று குறிப்பிட்டார். இலங்கை அரசின் போக்கு பற்றி ரொமேஷ் பண்டாரி குறிப்பிடுகையில் தற்பொழுது இலங்கை அரசு கடைப்பிடிக்கும் போக்கும், கொள்கைகளும் இலங்கைத் தமிழர்களின் துன்பநிலையை நீடிக்கச் செய்யும்; மேலும் இலங்கையும் இலங்கைமக்களும் எதிர் நோக்கியுள்ள துயரத்தை அதிகமாக்கும்; ஆதலால் தமிழர்களை கொன்று குவிப்பதை இலங்கை இராணுவம் உடனடியாக நிறுத்த வேண்டும் "என்ருர் இப்படியாக இந்தியா தனது கண்டனத்தை தெரிவித்தது.

## உதவியளிக்கும்

## நாடுகளின் மாநாடு

இலங்கையின் பொருளாதாரம் பலவழிகளிலும் ஆட்டங்கண்டுவிட்டது; இராணுவ செலவு 696 கோடி ருபாயை எட்டிவிட்டது. வேலையில்லாத் திண்டாட்டத்தால் சிறீலங்கா தொழிலாளர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்; சர்வதேச கம்பனிகளுக்கு விவசாய நிலங்களை தாரை வார்ப்பதற்கு எதிராக சிறீலங்கா விவசாயிகள் போர்க்கொடி தூங்கியுள்ளனர். சிறீலங்காவில் சக்திவாய்ந்த போராட்டமாக மொனராகல விவசாயிகள் போராட்டம் உருவெடுக்கிறது; மொனராகலை விவசாயிகள் போராட்டத்திற்கு ஆதரவாக அமைப்புகள் உருவாக்கப்பட்டு சிறீலங்காவின் அனைத்து உழைக்கும், உழவர்வர்க்கத்தின் போராட்டங்களை ஒருங்கிணைக்கிறது இராணுவம் பல குழுக்களாக மோதுகின்றது; பல இராணுவ சிப்பாய்கள் யாருக்கும் தெரியாமல் ஓடுகின்றனர். சிலர் தற்கொலை செய்கின்றனர் இலங்கையில் நடப்பது இனப் படுகொலையே என உலக நாடுகள் குற்றம் சாட்டுகின்றன; இலங்கைக்கான உதவியை நிறுத்த திட்டமிட்டுள்ளன. தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேச ரீதியில் ஆதரவு வலுக்கிறது. இலங்கைக்கு கடன் வழங்கும் ஏகாதிபத்திய நிறுவனங்கள் கூட தற்போது கடனை நிறுத்த திட்டமிட்டுள்ளன். ஏனெனில், தமது கடனை திருப்பம் பெறக்கூடிய வகையில் அரசியல் ஸ்திரத்தை பேணும் நாடுகளுக்கே அவை கடனை வழங்குகின்றன. சிறீலங்கா அரசு தறிகெட்டு போகிற நிலையில் எவன் கடன் வழக்குவான்? யார் உதவியளிப்பார்கள்?

சிறீலங்காவின் தரகு முதலாளித்துவ அரசுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த ஆபத்தான நிலையில் தான் எதிர்வரும்ஜூன் மாதம் இலங்கைக்கு உதவியளிக்கும் நாடுகளின் மாநாடு நடைபெற இருக்கிறது. இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு இலங்கை அரசு எடுக்கும் முயற்சிகளை பொறுத்தே இந்நாடுகள் தமது உதவியை அளிக்க திட்டமிட்டுள்ளன.

இக்காரணங்களால் தான் தற்போது அரசியல் ரீதியில் பேச்சுவார்த்தை- சமாதான வழியில் தீர்வு என கூப்பாடு போடுகிருர்கள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடந்த ஆண்டு நடைபெற்ற போர் நிறுத்தம்-பேச்சுவார்த்தை; அதற்கு முதல் ஆண்டு நடை பெற்ற வட்டமேசை மாநாடு ஆகியவையும் இந்த ரீதியில் தான் நடைபெற்றது. அதாவது, கடந்த ஆண்டுஜூன் மாதம் பாரிசில் நடைபெற்ற கடன் அளிக்கும். நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டு நிதியை பெறுவதற்காகவே போர் நிறுத்தத்தை இலங்கை அரசு நாடியது. இதேபோல தான் அதற்கு முதல் வருடமும் உதவியை பெறுவதற்காக வட்டமேசை மாநாடு நடாத்தப்பட்டது. இந்த வரிசையில் இப்போது ஆரம்பிக்கிறார்கள்...

## இனப்படுகொலைகளை நிறுத்த சிறீலங்கா அரசால் முடியாது...

சென்ற ஆண்டு நடைபெற்ற போர் நிறுத்த காலத்திலும்-அதற்கு முதல் ஆண்டு நடை பெற்ற வட்ட மேசை மாநாடு காலத்திலும் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான படுகொலைகள் நிறுத்தப்படவில்லை என்பது அனைத்து மக்களும் அறிந்த உண்மையாகும். இதேபோல இவ்வாண்டும் ஆட்சியாளர்கள் எவ்வளவு தான் பேச்சுவார்த்தை, சமாதானம் என்று கூறினாலும் அனைத்தும் ஒடுக்குமுறைகளும் தொடர்ந்த வண்ணமே இருக்கும்.

ஏனெனில் நாம் மேலே கூறிய படி இலங்கையின் நிலை அப்படி தான் உள்ளது. அதாவது சிறீலங்காவில் வெடித்துக் கிளப்பும் போராட்டங்களை சமாளிக்க சிறீலங்கா கையாளும் பிரதான துரும்பு தமிழ் பேசும் மக்கள் மீதான பேரினவாத ஒடுக்குமுறைகள் தான் இது தவிர போதை பொருட்களை இறக்குதல்- விபச்சார விடுதிகளுக்கு அனுமதி வழங்குதல் போன்ற சீரழிவுக்கலாச்சாரங்களையும் இலங்கைத் தீவு முழுவதும் கட்டவிழ்த்து விட்டுள்ளது மொத்தத்தில் நாடே சீரழிந்து திக்குமுக்காடுகிறது. இதன் மூலமே ஜெயவர்த்தன அரசாங்கம் தனது ஆட்சியை தக்கவைத்துக் கொள்கிறது.

இப்போதும் போலிச் சமாதான வார்த்தைகளை அள்ளி வீசிய போதும் தமிழ் இனப்படுகொலைகளும்-யுத்த தயாரிப்புக்களும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

இங்கிலாந்து, பிரான்ஸ், இஸ்ரேல் நாடுகளிடமிருந்து 30 கோடி ரூபாய்க்கு பீரங்கி படகுகளை பெற்றுக் கொள்ள ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது இப்பீரங்கிப் படகுகள் இலங்கைக்கும்- தமிழகத்திற்கும் இடையேயுள்ள பாக் ஜலசந்தியில் குவிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சீன அதிபர் சிறீலங்காவுக்கு விஜயத்தை மேற்க்கொண்டார். சிறீலங்காவுக்கு ஆயுத சப்ளை செய்யும் ஒப்பந்தத்தில் இருநாட்டு அதிபர்களும் கைச்சாத்திட்டார்கள்

## தமிழ் ஈழமே தீர்வு...

எனவே தான் தமிழ் இனப் படுகொலைகளை தடுத்து நிறுத்த-தமிழ் பேசும் மக்களது உயிரையும், உடைமைகளையும் பாதுகாக்க தமிழ் தேசிய இனம் தனியே பிரிந்து சென்று தனக்கென ஒரு அரசை அமைப்பது, தமிழர்களுக்கென ஒரு அரசை அமைப்பது தவிர்க்க முடியாதது அதாவது தமிழ் ஈழ மக்கள் குடியரசை அமைப்பது தவிர்க்க முடியாதது.

ஜெயவர்த்தன அரசின் உண்மை சொருபங்களை உலக மக்கள் புரிந்து கொள்ள வேண்டும், அவர்களது பசப்பு, பசாங்கு வார்த்தைகளுக்கான காரணங்களை புரிந்து கொண்டு ஒடுக்கப்பட்ட ஈழ மக்களது ஏகாதிபத்திய எதிர்ப்பு போரில் தங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

---

# பயணக் கைதிகளாக தமிழ் மக்கள்...

இலங்கை சுதந்திரமடைந்ததாக சொல்லப்படும் 1948ம் ஆண்டு தொடக்கமே தமிழ் மக்களுக்கெதிரான ஒடுக்குமுறைகள் சிறிலங்கா ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன- இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணியின் பெரும் பகுதியை ஈட்டித்தரும் தோட்ட தொழிலாளர்களது குடியுரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர்கள் என அவர்கள் மீது முத்திரை குத்தப்பட்டது 1948ம் ஆண்டுதான். இவ்வாண்டுகளுக்குப் பின் உருண்டோடிய ஒவ்வோர் ஆண்டும் தமிழ் மக்களுக்கெதிரான ஒடுக்குமுறைகள் வளர்ந்தே வந்தன.

எங்கு மக்கள் ஒடுக்கப்படுகிறார்களோ அங்கு போராட்டம் வெடிப்பது இயல்பாகும்; வரலாற்று நியதியாகும். இதே போல தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட ஒடுக்குமுறைகளை எதிர்த்து, தமிழ் மக்களில் விழிப்படைந்தோர் போராட எழுந்தார்கள் போராட்ட அமைப்புக்களை கட்டினார்கள். சுரண்டுகின்ற சிறிலங்கா அரசை பாதுகாக்கின்ற ஆயுதப்படைகளுக்கு எதிராக, தமிழ் மக்கள் மீது கொலை வெறித் தாக்குதலை நடத்துகின்ற ஆயுதப்படைகளுக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொண்டார்கள் ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிராக போராடிய போராளிகளுக்கு மக்கள் ஆதரவு வழங்கினர். தங்களால் இயன்ற உதவிகளை செய்தனர்.

போராளிகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத சிறிலங்கா அரசு தமிழ் மக்களை பயமுறுத்தும் முயற்சியில் அதி தீவிரமாக இறங்கியது புதிய, புதிய சட்டங்களை இயற்றியது. ஆயுதப்படைகளுக்கு முழு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. தமிழ் மகன் ஒருவனை சுட்டுக் கொன்றாலோ அல்லது கைது செய்தாலோ அவற்றிற்கு ஆயுதப் படைகள் பொறுப்பல்ல என கூறப்பட்டது, இதனால் ஆயுதப் படைகளின் அட்டகாசங்கள் என்றுமில்லாதவாறு தலைவிரித்தாடின. [illegible] போகும் தமிழ் மக்கள் கேட்டுக் கேள்வியன்றி சுட்டுக் கொல்லப்பட்டனர். கைது செய்யப்பட்டனர். திடீர் திடீரென கிராமங்கள் ஆயுதப்படைகளால் சுற்றி வளைக்கப்படும். அக்கிராமங்களில் உள்ள இளைஞர்கள் அனைவரும் கை செய்யப்படுவார்கள். இராணுவ முகாம்களுக்கு இழுத்துச் செல்லப்படுவார்கள்; கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்படுவார்கள். கைது செய்யப்படுவோரை பார்வையிட எவரையும் அனுமதிக்க மாட்டார்கள். கைது செய்யப்பட்டோர் அனைவரும் ''பயங்கரவாதிகள்'' என உலக நாடுகளுக்கு அறிக்கை விடுவார்கள்.

சிறிலங்கா இராணுவ முகாம்களில், சிறைக் கூடங்களில் தமிழ் இளைஞர்கள் அனுபவிக்கும் சித்திரவதைகள் அனைத்து உலகமும் அறிந்ததாகும். பிரிட்டிஷ் S. S. படை தொடக்கம் இஸ்ரேல் மொசாத்படை ஈறாக மேற்கொள்ளும் கொடூர சித்திரவதைகளால் எமது இளைஞர்கள், யுவதிகளது சிந்தனை வளர்ச்சி முற்றாக மழுங்கடிக்கப்படுகிறது. வெறும் நடைப்பிணங்களாகவே அவர்கள் நடமாட முடிகிறது. கைது செய்யப்படுவோரில் சிலர் விடுதலை செய்யப்பட்ட போதிலும்; விடுதலையாகி சுமார் 5 மாத கால இடைவெளிக்குள் அவர்கள் இறந்துவிடுகின்றனர். அதாவது திட்டமிட்ட முறையில் சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

''பயங்கரவாதிகள்'' என முத்திரை குத்தப்பட்டு ஆயுதப்படைகளால் கைது செய்யப்பட்ட அப்பாவித் தமிழர்களது எண்ணிக்கைகளை கீழே வெளியிடுகிறோம். 1984. ஜூலை மாதத்திற்கு முன்னர் கைது செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்களது விபரங்கள் கிடைக்கப்படவில்லை.

| கைது செய்யப் பட்ட திகதி | இடம் | கைது செய்யப்பட்ட தமிழர்களது எண்ணிக்கை |
|---|---|---|
| 20-07-1984 | யாழ்ப்பாண நகரம் | 200 |
| 04-08-1984 | வல்வெட்டித்துறை | 328 |
| 09-08-1984 | ,, | 1000 |
| 21-08-1984 | நெல்லியடி | 400 |
| 23-08-1984 | கரவெட்டி | 150 |
| 05-09-1984 | வவுனியா | 500 |
| 17-09-1884 | யாழ். பஸ்நிலையம் | 50 |
| 26-09-1984 | முல்லைத்தீவு | 150 |
| 27-09-1984 | ,, | 45 |
| 13-10-1984 | மட்டக்களப்பு | 25 |
| 14-10-1884 | ,, | 60 |
| 19-10-1984 | யாழ்ப்பாணம் | 20 |
| 21-10-1985 | திருகோணமலை | 15 |
| 05-11-1984 | ,, விபரம் அறியப்படவில்லை | |
| 09-[illegible]-1984 | வவுனியா | 100 |
| 10-11-1984 | முல்லைத்தீவு | 25 |
| 13.11-1984 | கிளிநொச்சி | 500 |
| 14-11-1984 | ,, | 20 |
| 24-11-1984 | களுதாவளை | 136 |
| 25-11-1984 | களவாஞ்சிக்குடி | 123 |
| 27-11-1984 | கொழும்பு | 2°0 |
| 30-11-1984 | மன்னார் | 50 |
| 01-12-1984 | காங்கேசன் துறை | 15 |
| 03-12-1984 | சேமமடு | 93 |
| 04-12-1984 | காங்கேசன் துறை | 16 |
| 06-12-1984 | யாழ்ப்பாணம் | 60 |
| 07-12-1984 | கொழும்பு | 100 |
| 09-12-1984 | கைதடி | 500 |
| | ஆனைக்கோட்டை | 180 |
| | நெல்லிப்பழை | 30 |
| | முல்லைத்தீவு | 800 |
| 14-12-1984 | கொக்குவில் | 60 |
| | பண்ணாகம் | 26 |
| | காரைதீவு விபரம் அறியப்படவில்லை | |
| | கொக்கடிச்சோலை | 40 |
| | உன்னிச்சேரி விபரம் அறியப்படவில்லை | |
| 16-12-1984 | சாவகச்சேரி | 300 |
| 17-12-1984 | தென்மராட்சி | 200 |
| | மட்டக்களப்பு | 40 |
| 19-12-1984 | யாழ். நகரம் | 2000 |
| 21-12-1984 | ,, | 20 |
| 02-01-1988 | அல்வாய் | 200 |
| | திக்கம் | 200 |
| | நாலலடி | 200 |
| | இறுப்பிட்டி | 200 |
| 05-01-1985 | யாழ். நகரம் | 500 |
| 07-01-1985 | குப்பிளான் | 23 |
| 10-01-1985 | ஆவரங்கால் | 44 |
| 18-01-1985 | மண்டூர் | 93 |
| 26-01-1985 | துறைநீலாவணை | 80 |
| 30-01-1985 | மட்டக்களப்பு | 100 |
| 18-02-1985 | ,, | 57 |
| 21-02-1985 | மன்னார் | 40 |
| 28-02-1985 | மட்டக்களப்பு | 35 |
| 04-03-1885 | மன்னார் | 247 |
| 07-03-1985 | கரவெட்டி | 40 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | |
|---|---|---|
| 11-04-1985 | மட்டக்களப்பு | 60 |
| 24-03-1985 | சாவகச்சேரி | 30 |
| 27-03-1985 | அட்டாளச்சேனை | 25 |
| 06-04-1985 | பூநகரி | 60 |
| 1-5-1985 | உடப்பு (புத்தளம்) | 500 |
| 7-5-1985 | களவாச்சிக்குடி | 200 |
| 24-5-1985 | மன்னம்பிட்டிய | 30 |
| 25-5-1985 | கொழும்பு | 200 |
| 26-5-1985 | மட்டக்களப்பு | 80 |
| 3-6-1985 | துறைநீலாவணை | 50 |
| 16-6-1985 | திருமலை | 300 |
| 17-6-1985 | ஆரயம்பதி | 94 |
| 17-9-1985 | நிலாவெளி | 97 |
| 21-9-1985 | வடமுனை | 89 |
| 23-9-1985 | பூவரசங்குளம் | 42 |
| 25-9-1985 | மட்டக்களப்பு | 100 |
| 28-9-1985 | திருமலை | 45 |
| 30-9-1985 | ,, | 2000 |
| 1-10-1985 | சாம்பல் தீவு | 60 |
| 2-10-1985 | மட்டக்களப்பு | 300 |

பயணக் கைதிகளாக்கப்பட்டோரில் 4,000 பேர் தவிர ஏனையோர் விடுதலை செய்யப்பட்ட போதிலும், நாம் ஆரம்பத்தில் கூறியதுபோல வெறும் நடைப்பிணங்களாகவே அவர்கள் உலாவுகிறார்கள். இக் கோரச் செயல்களுக்கு மாத்திரமல்ல தமிழ் மக்கள் அனுபவிக்கும் அனைத்து ஒடுக்குமுறைகளையும் உடைத்தெறிந்து சமதர்ம தமிழ் ஈழத்தை கட்டியமைக்க போராடும் எமது கரங்களை வலுப்படுத்துங்கள்,

# பாதை சுத்தமாக.

ஆதிக்க வெறியர்களின்
அடக்குமுறை, இன ஒதுக்கல்
உரிமை மறுத்தனர்
உடமை அழித்தனர்
உயிர் பறித்தனர்

o

இனியும் பொறாது
பொங்கி எழுந்தது
மக்கள் வெள்ளம்
அணை உடைத்தது
கரைபுரண்டு
தங்கு தடையின்றிப்
பெருக்கெடுத்தது

o

நேரிய பாதையில்
நெடும் பயணம்
தொடர்ந்தது
தொலைவில் தெரிந்த தமிழீழம்
அருகில் நெருங்கி
வருகையில்

o

ஏதோ நெருடல் மனதில்
புரட்சிப் பாதையின்
குறுக்கே முட்கள்
வெண்ணெய் திரளுகையில்
தாழியில் விரிசல்
ஒற்றையடிப் பாதையிலும்
தடை கொடுக்கும் முட்கள் எவை:
ஓ!
எதிர்ப்புரட்சியாளர்
இவர்கள்
இவற்றை
இனங்கண்டு ஒதுக்கினாலே
பாதை சுத்தமாகும்.

—இரா. பாஸ்கர்.
காமராஜர் மாவட்டம்.

## நீதவான் கிருபாகரனுக்கு அஞ்சலி

கடந்த 11-03-1986ல் தவறுதலாக குறிதவறிப்பட்டதனால் மரணமடைந்த நீதவான் கிருபாகரன் அவர்களுக்கு எமது அஞ்சலியை செலுத்துகிறோம்.

அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அவர்களுக்கு என்றென்றும் நாம் உறுதுணையாக இருப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். இச்சம்பவத்தில் காயமடைந்த மருத்துவ தாதிக்கும் எமது மன வருத்தங்களை தெரிவிப்பதோடு மன்னிப்பையும் வேண்டுகிறோம்.

இத்தகைய நிலைக்கு எம்மை இட்டுச் சென்றுவிட்டவர்கள் "தாஸ்" தலைமையிலான அராஜக கும்பல்களே. இவர்கள் போன்ற அராஜக கும்பல்களை வளரவிடாது தனிமைப்படுத்தும் போராட்டத்தில் மக்கள் எம்முடன் அணிதிரள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம். அப்போதுதான் யரந்துபட்ட தமிழ் மக்களது வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கக் கூடிய தமிழ் ஈழத்தை விரைவில் வென்றெடுக்க முடியும்.



★ இலங்கையில் நடப்பது இனப்படுகொலையே
- T. R பகத்

★ வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைக்க வேண்டும்.
- பண்டிருட்டி யோசனை.

★ அப்பாவி மக்கள் கொல்லப்படும்போது பேச்சு வார்த்தை சாத்தியமில்லை
- K. R. நாராயணன்.

★ சிறிலங்காவின் உயர் தலைவர்கள் இராணுவ தீர்வையே விரும்புகின்றனர்.
- ஐ. நா. மனித உரிமை குழுவில் இந்தியா.

★ தெற்கு பகுதியில்கூட தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லை
- ஐ. நா. இனவெறி ஒழிப்பு கமிட்டியில் இந்தியா.

★ ராஜீவ் காந்தி உயர்மட்ட ஆலோசனை.

## இலங்கைப் பிரச்சனையில் இந்தியாவின் செயல்பாடுகள் தீவிரமடைகின்றன.

இலங்கைப் பிரச்சனையை தற்காலிகமாவது தீர்த்துவைக்க முயற்சி எடுப்பது இந்தியாவை பொறுத்தவரை தவிர்க்க முடியாததாகும். ஏனெனில், இலங்கைப் பிரச்சனையானது இந்தியாவுக்கு பெரிய தலையிடியைக் கொடுக்கிறது என்பதில் ஐயமில்லை.

இந்தியாவுக்கு எதிராக நாளும் பொழுதும் யுத்த தயாரிப்புக்களை மேற்கொள்ளும் அமெரிக்கா தற்போது இலங்கைப் பிரச்சனையையும் சாட்டாகவைத்து இலங்கையை இந்தியாவுக்கு எதிரான யுத்த தளமாக மாற்றி வருகிறது. பாக் ஜலசந்தி பகுதி முழுவதும் யுத்தக் கப்பல்கள் நிலைநிறுத்தப்படுகின்றன. அமெரிக்க யுத்தக் கப்பல்கள் சிறீலங்கா துறைமுகத்திற்கு அடிக்கடி வருவது வழமையாகிவிட்டது. பாகிஸ்தான் அதிபர் தொடக்கம் சீன அதிபர் ஈறாக சிறீலங்காவிற்கு விஜயம் செய்வது வாடிக்கையாகிவிட்டது. பிரித்தானியாவின் SAS தொடக்கம் இஸ்ரேல் மொசாத் ஈறாக அனைத்து ஏகாதிபத்திய அவர்களது பாதந்தாங்கிகளது உளவு நிறுவனங்கள் சிறீலங்காவில் குவிந்து கிடக்கின்றன. இந்நிலமைகளானது, இந்தியாவின் பாதுகாப்பிற்கே மாபெரும் அச்சுறுத்தலாகும்.

இலங்கைப் பிரச்சனையால் இந்தியாவிற்கு வந்து குவியும் அகதிகளின் எண்ணிக்கை 1,25,000 பேரை எட்டிவிட்டது இவர்களுக்காக இந்தியா 1983-1984 காலப்பகுதியில் 7?,50 லட்சம் ரூபாயும்-1984-1985 காலப் பகுதியில் 1.43 கோடி. ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது இது இந்தியாவுக்கு பெரிய சுமையாகும். "இலங்கையிலிருந்து இலட்சக் கணக்கான அகதிகள் தங்களது வீடுகளை விட்டு வெளியேறி தமிழ் நாட்டிற்கு வந்துள்ளனர் இது மிகவும் கடுமையான விஷயம் இவர்கள் கௌரவத்துடனும், கண்ணியத்துடனும் இலங்கைக்கு மீண்டும் திரும்புவதற்கான நிலமை உடனடியாக உருவாக்கப்படவேண்டும் என ராஜீவ்காந்தி அண்மையில் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிறீலங்கா இந்திய மீனவர்களை சுட்டுக் கொல்கின்றது; அடித்து விரட்டுகின்றது; இதனால் இராமேஸ்வரத்தில் பதட்ட நிலை உருவாகியுள்ளது பல மீன்பிடி கப்பல்கள் மீன்பிடிக்கச் செல்வதில்லை. இதனால் பல தொழிலாளர்கள் வேலை இழந்து தவிக்கின்றனர். இராமேஸ்வரத்திற்கும்- தலைமன்னாருக்கும் பயணத்தை மேற்கொள்ளும் S.S. ராமானுஜம் என்ற கப்பல் கடந்த 1984 அக் மாதம் தொடக்கம் பயணத்தை நிறுத்திவிட்டது வாரத்திற்கு 3 தடவை பயணத்தை முன்பு மேற்கொண்டது ஒவ்வொரு பயணத்திலும் 50,000 ரூபாய் வருவாயை ஈட்டுகிறது. தற்போது வருவாயை இழந்தது மாத்திரமல்ல, இக் கப்பலில் கடமையாற்றிய பல தொழிலாளர்கள் வேலையிழந்து தவிக்கின்றனர். கப்பல் பயணம் தடைப்பட்டதால் சுற்றுலா பயணிகளது இராமேஸ்வர வருகையையும் நின்றுவிட்டது. இதனாலும் பலர் வேலையிழந்து தவிக்கின்றனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இலங்கையில் தினமும் நடைபெறும் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைகள் தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பை உருவாக்கி வருகின்றது.

ஆதலால், மேற்கூறிய காரணங்களால் இனப்பிரச்சனைக்கு உடனடி அரசியல் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தி இந்தியா வருவதோடு தன்னாலியன்ற முயற்சிகளையும் எடுத்து வருகின்றது. ஆனால் ஜெயவர்த்தனா அரசாங்கமோ தனது பொருளாதார நெருக்கடி காலங்களில் இந்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாவின் முயற்சிக்கு ஆதர வளிக்கிறது. நெருக்கடிகள் தற் காலிகமாக தீர்ந்ததும் அதா வது உலக நாடுகளிடமிருந்து கடனையும் உதவியையும் பெற்ற தும மீண்டும் ராணுவத்தீர்வே கடைப்பிடிக்கப்படும் என கூறு கிறது. இந்தியாவின் முயற்சி யை தட்டிக்கழிக்கிறது.

இந்தியா இதுவரை எடுத்து வந்த இரு முயற்சிகளை மேற் கூறிய பாணியில் சிறீலங்கா அரசு கையாண்டது. எனவே தான், இலங்கை இனப்பிரச் சனையால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை இந்தியா முறி யடிக்க வேண்டுமாயின், தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்.

ஆனால், அண்மைக் காலமாக ''இலங்கையில் நடப்பது இனப் படுகொலை'' யே என இந்தியா சர்வதேச அரங்கில் பிரச்சாரம் செய்து வருவது வரவேற்கத் தக்க முயற்சியாகும். இதே போல. UNP அரசின் உண்மை நிலையை உணர்ந்து தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிப்பதோடு, சிறீலங்கா அரசுக்கு எதிராக பொருளா தார தடைகளையும் மேற் கொள்ள வேண்டும்.

இலங்கை நிலைமை பற்றி பாராளுமன்றத்தில் பேசிய இந்திய வெளியுறவு அமைச்சர் T.R. பகத் ''இலங்கை இராணு வம் தறிகெட்டு பாய்கிறது; அதன் நடத்தை நாகரீகமான தாக இல்லை இனப்படுகொலைக்கு ஒப்பானதாக இருக்கிறது. தமிழர்களது படுகொலையை விசாரிக்க சுயேச்சையான கமிஷன் அமைக்கப்பட வேண்டும். கிழக்கு மாகாணத் தில் உள்ள மக்கள் தொகையின் தன்மையை பாதுகாக்க திட்ட வட்டமான உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும்'' என குறிப்பிட்டார். கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்டு நடத்தப்படும் சிங்கள குடியேற் றங்களை கருத்திற் கொண்டு மந்திரி பகத் பேசியது வரவேற் கத்தக்கதாகும். மந்திரி பகத் நாடாளுமன்றத்தில் இப்படி பேசிய வேளையில் தான் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் மீதான போர்விமானத்தாக்கு தல் பகிரங்கமாக மேற்க் கொள்ளப்பட்டது. இவற்றை இந்தியா கவனத்திலெடுக்க வேண்டும்.

இதுமட்டுமல்ல, மந்திரி பகத் தினுடைய பேச்சுக்களை அடுத்து கடந்த 04-03-1986ல் கூடிய சிறீலங்கா பாராளுமன்றம் இந்தியாவுக்கு எதிரான வசை மாரிகளை பொழிந்து தள்ளியது ''இலங்கை பற்றி கடந்த ஆண்டு இந்திய பாராளு மன்றத்தில் குறை கூறிய இந்திய வெளியுறவு துணை மந்திரி குர்ஷித் ஆலம்கான் பின்னர் அந்தப் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டதை பகத் திற்கு நினைவு படுத்துவதாகவும் அந்த நிலை பகத்திற்கும் ஏற்படக்கூடாதென அமைச்சர் பெர்ணாண்டோ கிண்டல் செய்தார். இந்திய வெறியுறவு மந்திரிதனது கருத் துக்களை வாபஸ் பெற்று இலங் கை மக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டுமென பல உறுப் பினர்கள் வலியுறுத்தினார்கள் ஆனால் ஜெயவர்த்தனவே அண்மையில் அளித்துள்ள இரு பேட்டிகளில் 1983 ஜூலையில் நடைபெற்றது இனப்படு கொலையே என்பதை ஒப்புக் கொண்டது இங்கு குறிப்பிடத் தக்கது.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும்படி இந்தியா இலங்கைக்கு இறுதி எச்சரிக்கை விடுக்க வேண்டுமென இந்திய பாராளுமன்றத்தில் கடந்த 13-03-1986ல் பல உறுப்பினர் கள் வற்புறுத்தினர். இதற்கு பதிலளித்து பேசிய இந்திய வெளிவிவகார துணையமைச்சர் K. R. நாராயணன் ''இனப் பிரச்சனைக்கு தீர்வு காணும்படி இலங்கை அரசுக்கு இந்தியா எச்சரிகை விடுப்பதால் பிரச் சனை தீராது...'' ''இலங்கைத் தமிழர் மீதான வன்முறையை அந்நாட்டரசு உடனடியாக நிறுத்த வேண்டும்'' ''அதே சமயம் அப்பாவி மக்கள் கொல் லப்படும் போது பேச்சுவார்த் தை நடத்துவது சாத்திய மில்லை...'' என கூறினார்.

சிறீலங்கா இராணுவம் போர் விமானங்கள் மூலம் தமிழர் களது வசிப்பிடங்கள் மீது குண்டு வீச்சு தாக்குதல் நடத் தியதையடுத்து, ராஜீவ்காந்தி தனது உயர்மட்ட அதிகாரி களுடன் கடந்த 01-03-1986-04-03-1986 ஆகிய தினங்களில் ஆலோசனை நடத்தினர், இவ் உயர்மட்ட ஆலோசனையில் வெளியுறவு மந்திரி T. R. பகத் வெளியுறவு செயலர் பண்டாரி இலங்கையிலுள்ள இந்திய தூதர் தீட்சிக் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்திய மத்திய மந்திரி சபையில் அரசி யல் விவகாரக் கமிட்டியும் கடந்த 05-03-1986ல் ராஜீவ் காந்தி தலைமையில் கூடி இலங் கைப் பிரச்சனை பற்றி விவாதித் தது. ''இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பதன் மூலமே அங்கு தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காணபது சாத்தியம் என தமிழக மின்துறை அமைச்சர் பண்டிருட்டி ராமச்சந்திரன் இம் மாநாட்டில் வலியுறுத் தினார்.

கடந்தமாதம் முதல் வாரத் தில் ஜெனிவாவில் கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கமிஷன் முன் சிறீலங் கா அரசின் நிலை பற்றியும் அங்கு அப்பாவித் தமிழர்கள் கொலை செய்யப்படுவது பற்றி யும் இந்தியா குரல் எழுப்பியது மனித உரிமைக் கமிஷன் முன் கடந்த 12-03-1986ல் உரை யாற்றிய இந்திய பிரதிநிதி தில்லான். G. S. (முன்னாள மத்திய அமைச்சர்) பின்வரு மாறு குறிப்பிடடார்.

''இலங்கையில் போராளி களுக்கும், அப்பாவிகளுக்கும் வித்தியாசம் காட்டபபடுவ தில்லை. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மீது கண்மூடித் தனமான தாக்குதல் நடக்கிறது மொத்தத்தில் தமிழ் சிறுபான் மையினரின் மனித உரிமைகளை கடுமையாக மீறும் நடவடிக்கை யில் இலங்கை அரசு இறங்கி யுள்ளது. இது இந்தியாவுக்கு கவலை அளிக்கும் விஷயம் மட்டு மல்ல மனித உரிமைகள மீது அக்கறை கொண்டவர்களுக்கு இது சவாலாகும்.''

''1,25,000க்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் இந்தியா வில் அகதிகளாக வந்துளளனர். சுமார் 45,000 பேர் மேற்கு ஐரோப்பிய நாடுகளில தஞ்சம் புகுந்துள்ளனர். தற்போதைய நிலைமைகளை பார்க்கும்போது அவர்கள் கண்ணியத்துடனும் பாதுகாப்புடனும் தாய்நாட் டிற்கு திரும்பச் செல்ல முடி யாது எனத் தோன்றுகிறது, அகதிகளாக வந்து கொண்டி ருப்பவர்களின் எண்ணிக்கை குறையவில்லை, இதற்கு ஒரு முடிவே இருக்காது போன்ற அபாயமும் காணப்படுகிறது''

''அகதிகள் கூறும் கண்ணீர்க் கதைகள் இலங்கையின் வடக்கு; கிழக்கு மாகாணங்களில் தமி ழர்கள் மீது மனித உரிமைகளை மீறும் நடவடிக்கைகளில் அந்த நாட்டு அரசு ஈடுபட்டுள்ளது என்பதை தெரிவுபடுத்துகின் றது.''

''தரை, கடல், ஆகாய மார்க் கங்களில் ராணுவத்தினர் அப் பாவி மக்களை அப்பட்டமாகக் கொலை செய்வதானது, இலங் கைத் தமிழ் சமுதாயம் முழுவ தையும் ராணுவம் பழிவாங்கு வதுபோல் தோன்றுகிறது. தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் பிடித்துச் செல்லப்படு கிறார்கள் மிருகத்தனமாக சித் திரவதை செய்யப்படுகிறார்கள். சிலர் கொலை செய்யப்படுகி றார்கள்.''

''கடந்த ஆண்டு மத்தியில் தமிழ் போராளிகளுக்கும், இலங் கைப் படையினருக்கும் இடை யே சண்டை நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதையடுத்து ஒரு தீர்வு கான நம்பிக்கை ஓரளவு நிலவி யது இந்தியாவின் சமரச முயற்சியின் பேரில் இருதரப் பினருக்கும் பேச்சு வார்த்தை கள் நடந்து சண்டை நிறுத்தக் கண்காணிப்புக் கமிட்டி ஒன் றும் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் கடந்த ஆண்டு கடைசி 3 மாதங்களில் நிலைமை மோச மடையத் தொடங்கியது. இலங் கை அரசின் உயர் தலைவர்கள் வெளியிடும் அறிக்கைகளைப் பார்த்தால் ராணுவத் தீர்வு ஒன்றையே அவர்கள் விரும்பு வதாகத் தெரிகிறது.''

''அடிப்படையில் சமூக, அரசி யல் பிரச்சனை ஒன்றுக்கு தீர்வு கான ஆயுதம் எடுப்பதை கை விடுமாறு அனைத்து தரப்பின ரையும் வேண்டுகிறேன். இத் தகைய ஒரு நிலைமையில் பாதிக் கப்பட்ட தமிழர்களின் நம்பிக் கையை மீண்டும் பெறுவதற் கான பெரும் பொறுப்பு இலங் கை அரசையே சாரும்.''

இவ்வாறு G. S. தில்லான் பேசினார்.

கடந்த மாதம் இரண்டாவது வாரத்தில் நடைபெற்ற ஐ.நா. சபையின் இனவெறி ஒழிப்புக் கமிட்டியின் கூட்டத்தில் கடந்த 12-03-1986ல் இலங்கைப் பிரச சனை தொடர்பாக விவாதிக்கப் பட்டது.

சிறீலங்கா அரசுப் பிரதிநிதி 'சுனில்டிசில்வா'' இலங்கை நிலைமைகள் குறித்த அறிக்கை யொன்றை தாக்கல் செயதார். இதன் பின்னர் அவர் பேசும்



## தோழிக்கு மடல்...

அன்புத் தோழிக்கு!

தூங்கிக் கிடந்த என்னை துணை தேடி வந்தாய்.

இந்த மலைச் சாரலில் நாம் தேயிலை கொய்யும்போது எங் களை தேடி வந்து உனது அப்பாவுடன் புகைப்படம் பிடிப் பாய், நான் எனது புகைப்படத்தை பார்க்க வேண்டுமென்ற பலநாள் ஆவலாய் இருந்து எப்படி உன்னைக் கேட்பதென்று ஏங்கி தவித்தேன். ஒரு நாள் உன்னை கேட்கும்போது அம்மா என்னை திட்டினா ''துரை பேசுமடி பேசாமல் இரு'' என்று.

எங்களுக்கு சம்பளம் கொடுத்த அன்று நான் உன்னைக் கேட்டேன்; எனக்கு ஒரு புகைப்படம் தாரீர்களா என்று; அன் றைக்கே நீ என்னுடன் சேர்ந்து புகைப்படம் பிடித்தாய்; அதைப் பார்த்து என்மேல் இங்குள்ளவர்கள் எவ்வளவு பொறாமைப்பட் டார்கள் தெரியுமா? அதற்குப் பின் நீ... இங்கு அடிக்கடி வருவாய் அந்த பச்சைக்காரிலே நாங்கள் எல்லோரும் ஆனந் தக் கடலில் மூழ்கித் தவிப்போம், ''எந்த பிறப்பில் துரையின் மகள் எங்களோடு பேசுவாள் இனிமேல்'' என்று. அருள் ஒரு நாள் தட்டத்தனியே புத்தகக் கட்டுகளுடன் வந்து ''இன்று எல்லோரும் வேலையை விட்டு வரும்போது வாருங்கள்; உங்களு டன் பேசப் போகிறேன்'' என்றாய். அன்று எப்படி நாங்கள் வேலையை விரைவாகச் செய்தோம் என்று எனக்கு ஆச்சரியமாய் இருந்தது; அதைவிட அதிர்ச்சி என்னவென்றால், நீ சொன் னாய் நான் இங்கேயே இருக்கப் போகிறேன் என்று. துரை வந்து எம்மை திட்டமாட்டாரா என்ற பயம் ஒரு பக்கம். நீ... இந்த மலையில் எங்களைப்போல் இருப்பதற்கு உன்னை எப் படி பழக்கப் படுத்தப் போகிறாய் என்று நான் ஏங்கினேன். ''சீக்கிரமே உன்னை மாத்திக் கொண்டாய்'' அதை நினைத்தால இப்பவும் என் மனம் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

நாம் எல்லோரும் அடிமை! இதற்கு விடிவை தேட வேண் டும்! இதற்காக எமது இளைஞர்கள். இயந்திரத் துப்பாக்கி ஏந்தி போராடுகிறார்கள்; அவர்களோடு சேர்ந்து நாமும் அணி அணியாய் போராட்டத்தில் குதிக்க வேண்டும்; வேலை நிறுத்தப் போராட்டங்களை நடத்த வேண்டும் என்றாய்; ஜெயவர்த்தனா அரசே! எமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்து! அடிமை வாழ்வை அடியோடு அறுப்போம்! எமது மண்ணை மீட்போம்! அமைதியை தேடுவோம்! என்று கோஷம் எழுப்புவோம் எனச் சொன்னாய்; இக் கோஷங்களுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தும் போது எங்க அப்பாமார்கள் வேண்டிய அடியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்பவும் எழும்ப முடியாமல் இருக்கிறார்கள். என்னைப்போல் கன்னியர்கள்......

ஏன் நான் இதை எழுத தேவையில்லை; உனக்கு தெரியும் தானே. ஏண்டி! நீ ஒரு தபால் அனுப்பியிருந்தாய், ''எங்கள் தோட்டம் எங்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். வேறு யாராவது வந்து தங்களுக்கு சாதகமாய் பயன்படுத்தி விடுவார்கள்'' என்று எழுதியிருந்தாய். அதற்கு பின் உனக்கு பதிலாய் எத்தனையோ பேர் வந்தார்கள்; இப்போது ஒற்றுமையாய் இருந்த எமது மக்கள், சிறிய சிறிய பிரிவுகளாக சிதறிவிட்டார்கள். எங்கள் ஒற்றுமையே குலைந்துவிட்டது. அப்படி இருந்தும் எங்களுக்கு விடுதலை கிடைத்துவிடும்; எங்களுக்கு அதிகசம்பளம் கிடைக்கும்; நாங்கள் ரொட்டியை கைவிட்டு அடிக்கடி சாதம் சாப்பிடலாம் என்றெல்லாம் நினைத்தோம்.

ஆனால், இப்போது ரொட்டிக்கும் வழியில்லாமல் தவிக்கிறோமடி; நீ... எங்கு இருக்கிறாய்— என்று தெரியவில்லை; போன மாதம் தான் அப்பா இறந்தவர்; அதைத் தொடர்ந்து உனக்கு எத்தனையோ தபால்கள் அனுப்பியிருந்தேன். ஆனால் பதில் ஒன்றுமே கிடைக்கவில்லை; இங்கு வரும் 'பத்திரிகைகளில் ஹெலிகாப்டரை சுட்டு வீழ்த்தி விட்டார்கள்; 200 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்' ஒன்பது தீவிரவாதிகள் பிடிபட்டனர்; 70 தமிழ் குடும்பம் அடியோடு எரிக்கப்பட்டது. என்று எங்கள் கணக்குப்பிள்ளை வாசித்துக்காட்டுவார்.

ஏண்டி, அருள் நாங்கள் உனக்கு என்ன குற்றம் செய்தோம் இப்ப எங்களுக்கு சம்பளமும் இல்லை, சாப்பாடும் இல்லை. ஊருக்காய் உழைத்த எமது உடம்பு மெழுகுத்திரிபோல் உருகுதடி. அன்றைக்கே எமது அப்பாக்கள் சொன்னார்கள் "ஒருபோதும் முதலாளிகளை நம்பக்கூடாது. இது ஒரு நாடகமாகத்தான் இருக்க வேண்டும்'' என்று.

இது உண்மைதானா? உனது பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கும்

உன் அன்புத் தோழி

**உதயகுமாரி**

போது ''இலங்கையில் நிலவும் வன்முறைச் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பொறுப்பு 'பயங்கரவாதிகளின்'' கையில்தான் உள்ளது. இலங்கை அரசின் வசம் இல்லை என்று தெரிவித்தார்.

இலங்கைப் பிரதிநிதியின் அறிக்கையில் குறுக்கிட்டு இந்தியப் பிரதிநிதி திருமதி சாந்தி அலி பேசினார்.

''இலங்கை நிலைமை மிகவும் மோசமடைந்துவிட்டது. சிறுபான்மைத் தமிழர்களின் நிலைமை மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளது. இலங்கையில் வன்முறைகளும், படுகொலைகளும் அதிகரித்து வருகின்றன. வடக்கு கிழக்கு மாநிலங்களில் மட்டுமல்ல தோட்டப் பகுதிகளிலும உள்ள அப்பாவித் தமிழர்களின் உயிருக்கு பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. தெற்கு மாநிலங்களில் கூட வகுப்புவாத பதட்ட நிலை இருப்பதாக செய்திகள் வெளியாகி உள்ளன. அதனால்: இலங்கையிலிருந்து தமிழர்கள் அகதிகளாக வெளியேறி உள்ளனர். 1,25,000 பேர் இந்தியாவில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். 45,000 பேர் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பலர் இடம் பெயர்ந்துள்ளனர். இலங்கை ராணுவம் தமிழர்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

இவ்வாறு இந்தியப் பிரதிநிதி திருமதி சாந்தி அலி பேசினார்.

இமமாநாட்டில் பேசிய இங்கிலாந்து பிரதிநிதி மைக்கேல் பார்க்கர் பாண்டனும் இலங்கை அரசை கண்டித்துபேசினார்.

''சமீபத்தில் ஜெயவர்த்தன பேசும் பொழுது இலங்கை இனப்பிரச்சனைக்கு ராணுவத் தீர்வு தான் ஒரே வழி என்று கூறி இருக்கிறார். இத்தகைய கொள்கை ஏற்படும் பொழுது பொதுமக்கள அரசு ரத்து செய்யப்படுவதில் போய் முடியும். நீதித்துறையும தனித்தன்மையை இழந்துவிடும். கடந்த ஆண்டுகளில் மருத்துவம் மற்றும் பொறியியல் உயர்கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. கடந்த காலத்தில் இலங்கையின் வளர்ச்சிக்கு இலங்கைத் தமிழர்கள் வெகுவாக உதவிய போதிலும் தற்பொழுது சமவாய்ப்பு என்ற உரிமையினை எதிர்பார்க்க முடியாத நிலை உள்ளது''

இவ்வாறு இங்கிலாந்து பிரதிநிதி பேசினார்.

இந்தியாவின் இச்செயல்பாடுகளை வரவேற்கும் நாம், எதிர் வரும் ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவியளிக்கும் மாநாட்டில் கலந்து கொண்டு உதவியை பெறும் வரை பேச்சுவார்த்தைக்கு சம்மதிக்கலாம். ஆனால் உதவியை பெற்று முடிநததும் மீண்டும் ராணுவத் தீர்வே கடைப்பிடிக்கப்படும் என்று கூறப்போவதென்பதில் எவ்வித ஐயமுமில்லை. இதனை இந்தியாபுரிந்து கொண்டு தனது செயல்பாடுகளை மென்மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என வேண்டுகிறோம்.

**அதாவது தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிப்பதோடு UNP அரசுக்கு எதிராக பொருளாதார தடைகளையும் விதிக்க வேண்டும்.**

# தொடரும் இன வெறியாட்டம்...

ஜெயவர்த்தன ஆட்சியாளர்கள் மீண்டும் உலக நாடுகளினதும்-உலக மக்களினதும் கண்களில் மண்ணைத் தூவ முயற்சிக்கிறார்கள். அதாவது தமிழர்கள் மீதான போர் விமானத் தாக்குதல்கள் இடை நிறுத்தப்படுமெனவும்-அகதிகள் நாடு திரும்பலாம் எனவும் கூறுகிறார்கள். இவர்கள் இப்படியாக கடந்த இரண்டு ஆண்டுகளாக கூறிக்கொண்டபோதும் தமிழ் இனப் படுகொலைகள் தொடர்ந்தே வந்தன இதுபோலவே இவ்வருடமும் ஆரம்பிக்கிறார்கள், தமிழர்கள் மீதான தாக்குதல்கள், நிறுத்தப்படும் என இவர்கள் ஊர் ஊராக உளறிக்கொட்கின்ற இவ்வேளையிலும் அனைத்தும் வழமைபோலவே நடைபெறுகின்றன. அவற்றின் விபரங்களை கீழே வெளியிடுகிறோம்.

**27-02-1986**

யாழ்ப்பாண மாவட்ட பகுதிகளில் இராணுவத்தினர் நடாத்திய குண்டு வீச்சில் 12 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 25 தமிழர்கள் காயமடைந்தனர். இச்சம்பவத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 7 பேர் கொல்லப்பட்டனர்-

கொக்குவில் கோவிலில் அமிர்தலிங்கம் சிவராஜா என்பவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

கிளிநொச்சியில் பாடசாலை மாணவர்கள் மீது இராணுவத்தினர் திடீர் துப்பாக்கி பிரயோகம் செய்தனர். இதில் 4 மாணவர்கள் காயமடைந்தனர்.

அதிகாலை 3.00 மணியளவில் பூநகரி-கிளிநொச்சி முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் கூட்டாக உருத்திரபுரம்-கனகபுரம் பகுதிகளில தேடுதல் வேட்டையில ஈடுபட்டனர். அவ்வேளை துப்பாக்கிச் சூட்டுச் சத்தமும்-குண்டு வெடிபபு சத்தமும் தொடர்ச்சியாக கேட்டவண்ணமிருந்தன. சேதம் பற்றிய விபரங்கள் தெரியவில்லை,

**28-02-1986**

வவுனியா நொச்சிமோட்டையில் வயலில் சூடு அடித்துக் கொண்டிருந்த 03 விவசாயிகளையும் வயலில் காவலில் இருந்த 03 மலையக இளைஞர்களையும் இராணுவம் கைது செய்தது.

கிளிநொச்சி, தர்மபுரத்தில் 15 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

மயிலிட்டி பகுதியில் ஹெலிகப்டர் தாக்குதலை மேற்க்கொண்டதில் 4 தமிழர்கள் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டம் வவுணத்தீவில் ஜெயவர்த்தன இராணுவம் சுட்டதில் 3தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

**01.03.1986**

நண்பகல் தெல்லிப்பளை, கட்டுவன் பகுதிகளில் போர் விமானமும்- ஹெலிகப்டரும் தாழ்வாக பறந்த நிலையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்க, பாலாலி இராணுவ முகாமிலிருந்து குண்டு வெடிக்கும் சத்தமும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கும் சத்தமும் தொடர்ச்சியாக கேட்டுக் கொண்டிருந்ததால், அப்பகுதி முழுவதும் பதட்டம் நிலவியது, கடைகள் மூடப்பட்டதுடன், போக்குவரத்தும் தடைப்பட்டது.

**02-03-1986**

நாவற்குழியிலிருந்து 200 யார் தூரத்திலுள்ள கைதடி என்ற இடத்திலுள்ள பாலம் ஒன்றை அரச கூலிப்பட்டாளத்தினர் பலத்த பாதுகாப்புடன் நடந்து வந்து உடைத்தெறிந்து போக்குவரத்தை துண்டிக்கச் செய்தனர் இதையறிந்த பொது மக்கள் பாலத்தை சீர்செய்து, போக்குவரத்தை ஒழுங்குபடுத்த முயன்று கொண்டிருந்த சமயம்; வெறிபிடித்த சிங்கள இராணுவம் ஹெலிகப்டரில் இருந்து துப்பாகிப் பிரயோகம் செய்ததில் இரண்டு தமிழர்கள் அதே யிடத்தில் கொல்லப்பட்டதுடன், ஒன்பது பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பரப்புக்கடத்தான் என்ற இடத்தில் யுத்தவிமானங்கள் குண்டுவீசி தாக்குதல் நடாத்தியதில் பாடசாலை ஒன்றும் அதன் அருகில் உள்ள வீடு ஒன்றும் முற்றாக சேதமடைந்தது.

**03-03-1986**

வவுனியா மாவட்டப் பகுதிகளில் கறுப்பு உடையணிந்து மிகவும் மோசமான படுகொலைகளை நடாத்திய சிங்கள இராணுவத்தினர் தற்போது யாழ்ப்பாண பகுதிகளுக்கும் வந்துள்ளனர் இன்று யாழ்க்கோட்டை, நாவற்குழி, தொண்டமானாறு, பருத்தித்துறை பகுதிகளுக்கு விசேட கடமைக்காக போயுள்ளனர், இவர்கள் முகாமை விட்டு வெளியேறி மிகவும் மோசமான தாக்குதலை நடாத்தலால் என பொதுமக்கள் அஞ்சுகின்றனர்.

**04-03-1986**

நண்பகலில் இருந்து இரவு நேரம் வரை வவுனியா விளாத்திக் குளம் பகுதி பொதுமக்கள வசிப்பிடங்கள் மீது போர் விமானங்கள் குண்டு வீச்சு தாக்குதலை நடாத்தின.

மன்னார் பரப்புக்கடத்தான் பகுதிகளில் போர்விமானங்களுடன், ஹெலிகப்டரும் சேர்ந்து குண்டு வீச்சுத் தாக்குதலையும்-பீரங்கித் தாக்குதலையும் மேற்க்கொண்டன.

தொண்டமானாறு பகுதி முழுவதும் பீரங்கி தாக்குதல்கள் நடைபெற்றன.

மேற்க்குறிப்பிட்ட சம்பவங்களின் சேதவிபரங்கள் பெறப்படவில்லை.

**05-03-1986**

மலையகப்பகுதியில் வீவிலை என்ற இடத்தில் 6 தோட்டத் தொழிலாளர்கள் ஜெயவர்த்தன அரச படைகளால் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து மலையகத்தில் மீண்டும் கலவரம் மூண்டுள்ளது.

**06-03-1986**

சின்னணியா, மாங்காயிருப்பு என்னுமிடத்தில் சிங்கள வெறியர்களினால் 3 பெண்கள்–2 ஆண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோழர்கள் சுந்தர்-றெக்ஸ்-தீபன்-குட்டி ஓராண்டு நினைவாக நாடெங்கும் ஒட்டப்பட்ட சுவரொட்டி,

கள் 1குழந்தை ஆகிய ஆறு பேர் வாளால் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு தாமரைக் கேணி பகுதியை காலை 600 மணியளவில் சுற்றிவளைத்த இனவெறி பொலிசார் தமிழர்களின் வீட்டினுள்ளே புகுந்து தாக்கியதோடு ஒரு தமிழரை 24 தடவைகள் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததுடன் இன்னொரு தமிழரின் காலகளைக் கட்டி வீதியால் இழுத்துச் சென்று சாகடித்தனர்.

வவுனியா, பாவற்குளத்தில் "வான்" ஒன்றில் பிரயாணம செய்து கொண்டிருந்த தமிழர்கள் மீது சிங்கள இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் வான் சாரதி உட்பட இரு பிரயாணிகள் கொல்லப்பட்டனர். 4 பேர் காயமடைந்தனர்.

07-03-1986

வவுனியா-மன்னார் பாதையிலுள்ள கன்னாட்டி என்னுமிடத்தில் அரச கூலிப்பட்டாளம் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் [illegible] வேல் என்ற தமிழர் கொல்லப்பட்டனர், பின்னர் இதேயிடத்தில் அரச பட்டாளம் மேற்கொண்ட போர் விமானத் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டார் இத்தாக்குதலில் பலர் பலத்த காயத்திற்குள்ளாகியதுடன், பல வீடுகளும் முற்றுக சேதமடைந்தது.

வவுனியா பம்பைமடு கிராமம் அரச இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதில் 4 தமிழர்கள் கொல்லப்பட்டனர்- இறந்தவர்களில் பெண் ஒருவரும் அடங்குகிறார். இவர் திருமதி செல்லத்துரை என அடையாளம் காணப்பட்டுள்ளது.

08-03-1986

ஏழாலை பகுதியிலுள்ள அச்செழு, கோயிலிட்டி ஆகிய பகுதிகளில் காலை 10 மணிமுதல் ஹெலிக்கப்டரில் இருந்து இராணுவம் தாக்குதலை நடாத்தியது இதில் பலர் காயமடைந்தனர், இரண்டு LTTE போராளிகளும் கொல்லப்பட்டனர். பல வீடுகள் சேதமடைந்தன ஹெலிக்கப்டர் தாழப் பறந்து தாக்குதலை மேற்கொண்டதால் தோட்டப் பகுதிகளும் பாதிக்கப்பட்டன.

சில தினங்களுக்கு முன்பு மன்னார் வவுனியா வீதியில் உள்ள பறையனாகுளம் என்ற இடத்தில் உள்ள வீடு ஒன்று சிறிலங்கா இராணுவத்தினர்குண்டு வைத்து தகர்த்தனர். அவ்வீட்டை அரச இராணுவத்தினர் இன்று முற்றுகையிட்டனர்.

கல்முனைப் பகுதியில் இனவெறி இராணுவம தமிழ் மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செயததில் 3 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணம் வசாவிளான் பகுதியை சுற்றி வளைத்து இனவெறி இராணுவம துப்பாக்கிப் பிரயோகம செய்ததில் 46 வயதான தமிழ்ப் பெண்மணி ஒருவர் பலத்த காயத்திற்குள்ளாகி கவலைக்கிடமான நிலையில யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

09-03-1686

மன்னாரிலுள்ள பரப்புக் கடந்தான் எனனுமிடத்தில் அரச படையினர் போர் விமானங்கள் மூலம் தாக்குதலை மேற்கொண்டதால் அவ்விடத்திலுள்ள மக்கள் அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

வவுனியா, கனகராயன் குளம் பகுதியில் சிங்கள இனவெறி இராணுவம் தமிழ் மக்களை மூர்க்கததனமாக தாக்க ஆரம்பித்ததை தொடர்ந்து அப்பகுதியில் குடியேற்றப்பட்டிருந்த 330 மலையக மக்கள் அருகிலுள்ள நெல் சந்தைப்படுத்தும் களஞ்சிய அறைகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். இச்சம்பவத்தின்போது மூன்று தமிழ் இளம் பெண்கள் முகாமிற்கு இழுத்து செல்லப்பட்டு நேற்றிரவு முழுவதும் முகாமினுள் வைத்து தாக்கபபட்டதோடு, கற்பழிக்கப்பட்ட நிலையில் இன்று விடுதலை செய்யப்பட்டனர்.

திருகோணமலையிலுள்ள அன்புவழிபுரம் - செல்வபுரம் ஆகிய பகுதிகளை சுற்றிவளைத்த வெறி பிடித்த சிங்கள போலீஸ் பட்டாளம் கண்மூடித்தனமாக தாக்கியதுடன் பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகமும் செய்ததில் எட்டு தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

10-03-1986.

வடமத்திய மாகாணப் பகுதிகளுக்கு கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டிருந்த விசேட பயிற்சி பெற்ற சிங்கள இனவெறி இராணுவம், போராளிகள் முகாம் அங்கிருப்பதாக கூறிக்கொண்டு தேடுதல் வேட்டை என்ற பெயரில் தனது அட்டூழியங்களை ஆரம்பித்துள்ளது.

11-03-1985

மன்னாரில் கடந்தவாரம்கைது செய்யபபட்ட 25 தமிழ் இளைஞர்களில் 7 பேர் பூசா இராணுவ முகாமிற்கு மாற்றப்பட்டுளளனர். 11 பேர் விடுதலை செய்யப்பட்டுளளனர். ஏனைய 7 பேரின் கதி என்னவென்று தெரியவில்லை, இவர்கள் படுகொலை செயயப்பட்டிருக்கலாம் என நமபப்படுகிறது.

12-0?-1956

வவுனியாபகுதியில் வேளாண்மைக்கு காவலாக இருந்த காவலாளிகளை இனவெறி இராணுவம் கைது செய்து தாக்கியது. இதன் எதிரொலியாக அப்பகுதிகளில் வேளாண்மை அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

13-03-1986

மயிலிட்டிப் பகுதிகளில் இனவெறி இராணுவம் ஹெலிக்காப்டரில இருந்து நடத்திய பீரங்கித் தாக்குதலில், அப்பகுதியில் வெங்காய அறுவடையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொதுமக்களில் 4 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

14-03-1986

பல கவச வாகனங்களிலும் தனியார் வாகனங்கள் சிலவற்றிலும் பரந்தன்பகுதியை சுற்றிவளைத்த இனவெறி இராணுவம் அப்பகுதியை சேர்ந்த சிவகரநாதன் என்பவரை கொலை செய்தது.

15-03-1986

மட்டக்களப்பில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு இளைஞர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு தமிழர் கொல்லப்பட்டார். மற்றவர் தப்பியோடிவிட்டார்.

16-03-1986

யாழ்ப்பாணத்தில் ஜெயவர்த்தன அரச இராணுவத்தின் பாரிய முகாம்களில் ஒன்றான பாலாலி இராணுவ முகாமிற்கு அருகாமையில் உள்ள மக்கள் தினமும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இன்றுவரை 80 சதவீத மக்கள் வெளியேறிவிட்டனர்.

17-03-1986

மூதூரில் உள்ள மணல்சேனை-பெருவெளி ஆகிய இடங்களில் சீருடை அணிந்த இராணுவத்தினர் அட்டூழியம் செய்ததால், பல வீடுகள் எரிக்கப்பட்டதோடு-உடைத்தும் நொருக்கப்பட்டன. இவ்வெறியாட்டத்தை நடத்துவலற்கு இராணுவத்தினர் நடந்தும் - கவச வாகனங்களிலும் வருவதை கணட பொதுமக்கள் காடுகளை நோக்கி ஓடினர். இச்சம்பவத்தின் பின்னர் பலர் இருதயபுரம் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

கல்முனையில் உள்ள கற்பிட்டி முனை என்னுமிடத்தில் பொலிஸ் கமாண்டோக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் கொக்குவிலை சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார்.

18-03-1986

இனவெறியாட்டங்கள் சேகரிக்கப்படவில்லை.

19-03-1986

மாலை 5-00 மணியளவில் உடுவில் - மானிப்பாய் பகுதிகளில் கடல்விமானம் வானில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

நெடுங்கேணி கிராமத்தை முற்றுகையிட்ட இராணுவத்தினர் சுற்றி வளைத்து தேடியபின் இவ்விடத்தை சேர்ந்த பொது மக்களில் 15 பேரை சுட்டுக் கொன்றது. 14 பேரை கைது செய்தனர். அங்குள்ள வீடுகளில் - இருந்து பெருமளவு விலையுயர்ந்த பொருட்களும் சூறையாடப்பட்டன. இச்சமபவத்திற்கு டொலர்பாம் - கென்பாம் ஆகிய இடங்களிலுள்ள இராணுவ முகாமிலிருந்து ஒரு ஜீப்பிலும், 7 ட்ரக்கிலும் வந்த 300க்கு மேற்பட்ட இராணுவத்தினரே மேற்க் கொண்டனர். இச்சம்பவத்தில் 35 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

கிளிநொச்சியில் உள்ள 2ம் வாய்க்கால் என்ற இடத்தில் தீவிரவாதிகள் பயிர் செய்வதாகக் கூறி 30 ஏக்கர் நெற்பயிரை இராணுவத்தினர் தீ மூட்டி எரித்தனர். அறுவடை செய்யப்பட்டு கட்டுக்கட்டாக வைக்கப்பட்ட நெற்கதிர்களை அந்த வயலகளிலேயே வேலை செய்த கூலியாட்களை கொண்டு குவித்து நெருப்பு வைக்கப்பட்டது.

20-03-1986

மட்டக்களப்பில் திடீரென நடத்தும், கவன வாகனங்களிலும் வந்திறங்கிய ஆயுதப்படையினர் மட்டக்களப்பில் முக்கிய ஐந்து சந்தி வழியாக போய் வந்து கொண்டிருந்த பொது மக்கள் 500 பேரை கைது செய்து இராணுவ முகாமிற்கு கொண்டு சென்றனர். கைது செய்யப்பட்டவர்களில் ஆண்கள் - பெண்கள் - சிறுவர்கள் வயோதிபர் ஆகியோரும் அடங்குவர்.

நாம் உடனுக்குடன் சேகரிக்கும வெறியாட்டங்களையே இங்கு குறிப்பிடுகிறோம். தினமும் நடாத்தப்படும் வெறியாட்டங்களின் முழுமையான விபரங்களை நாம் சேகரிக்க காலதாமதமாகும் என்பதை தெரிவிக்கிறோம். தினமும் நடைபெறும் வெறியாட்டங்களின் முழுமையான விபரங்கள எமது "ஏனைய" இதழில் பிரசுரமாகும்.

தினமும் ஜெயவர்த்தனா அரசாங்கம் நடத்தும் வெறியாட்டங்களை உலக மக்கள் புரிந்து கொண்டு, இவ் இனப்படுகொலைகளை தடுத்து நிறுத்த போராடும் எமது கரங்களை வலுப்படுத்துங்கள்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 0 வரலாற்றின் தொடர்ச்சியே எமது போராட்டம்...

*செ. அசோகன்*

தெருப்பை எப்படி பொட்டலம் கட்டமுடியாதோ
அப்படித்தான் எம்மையும் அழித் தொழிக்க முடியாது -
நாங்கள் வெட்ட வெட்ட தழைக்கும் ஜீவனுள்ளவர்கள்
ஒரு உயிரை பலிகொண்டதாய் இறுமாப்பு கொள்ளாதீர்
ஒரு உயிரின் அஸ்தமனத்தில் ஆயிரமாயிரம் சூர்யன்கள் உதிக்கும்.
எமது உயிர் - உயிர் மட்டுமேயில்ல - அவை விதைகள்
மாண்ட பின்பும் கூட முளைத்துயிர்த்தெழும் மகோன்னதமிக்கது -

இனவெறியர்களே - உம்மிடம் துப்பாக்கி இருக்கிறது - ஆனால்
எம்மிடம் துப்பாக்கி மட்டுமேயல்ல - அதன் ரவைகளாய்
உயரிய நோக்கர்களின் இலட்சியமும் இருக்கிறது.
எமது துப்பாக்கி ரவைகள் மறந்தும் மனிதர்களைத் தொடாது -
மனித உரிமைகளை மறுக்கும் மிருகங்களை மட்டுமே துளைக்கும்

அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களின் நாசகர ஆயுதங்கள்
வியாத்நாமிய வீரர்கள்முன் வலிமையிழந்து போயின என்பது
தானே வரலாறு.

சிங்கள இனவெறியர்களே- எமது போராட்டமும்
அம்மகாத்மிய வரலாற்றின் தொடர்ச்சியான நிகழ்வுதான்.
வெகு விரைவிலேயே அந்த வரலாறு எம்மால் நிருபிக்கப்படப்
போகிறது.

அந்நிருபணத்தில் ஏகாதிபத்யம் நிர்மூலமாக்கப் படத்தான்
போகிறது.

நாங்கள் பரந்த நோக்குடையவர்கள் - எனவே வெல்லப்
போவதும் நிதர்சனம்

அப்படி வெற்றி ஈட்டுகையில் எதிரிகளே - உங்களை பழிதீர்த்துக்
கொள்ள மாட்டோம்.

உம்மையும் மனித நேயத்துடன் நேசிப்போம்; சுரண்டலிலிருந்தும்
மீட்போம்

சமாதான நோக்குடையதால் எமது போராட்டம் கூட
புனிதமானது -

மாந்த நேயமுள்ளவர்கள் எம்மை இனம் கண்டு கொள்வார்கள்.
பொதுமை புருஷர்கள் எமக்கு நேசக்கரம் நீட்டுவார்கள்.
ஏனெனில் - எமது போராட்டம் எமக்காக மட்டுமேயல்ல -
உலகின் ஒவ்வொரு மூலையிலுமுள்ள எம்போன்ற ஒடுக்கப்பட்ட
வர்களுக்காகவே -
ஆகவேதான் எமது போராட்டம் வெற்றியின்றி ஓய்வதேயில்லை

★

## சீனத் தந்தை "சன் யாட் சென்" பேசுகிறார்.

o நமது புரட்சிக்கான அடிப்படைகள் மூன்று! அவை: "மக்களின் தேசியம், மக்களின் ஆளுமை மக்களின் நல்வாழ்வு" என்பன இந்த அடிப்படைதான் நமது புரட்சியை வெற்றியை நோக்கி இட்டுச் செல்கிறது.

o விடுதலை வாழ்விலிருந்துதான் மக்கள் நாயகம் பிறக்க முடியும். அடிமைவாழ்வில் மக்கள் நாயகம் இருப்பதாகப் பேசுவது உலகை ஏமாற்றுவதே ஆகும்.

o விடுதலை வாழ்வைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால், முதலில் விடுதலைப் போரைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

o நமது போராட்டத்திற்கு இலக்கு உண்டு. இன்றைய துன்பங்கள் அனைத்திலிருந்தும் நம் மக்களுக்கு விடுதலை வழங்குவதே அது. இந்த இலக்கை உணர்ந்து கொள்ளும் போதுதான் மக்கள் அனைவரும் போராட்டத்தில் பங்குபற்றுவார்கள். ஐரோப்பிய நாடுகளில் விடுதலைக் கொடி தூக்கப்பட்டவுடன் நூறாயிரக்கணக்கான மக்கள் அந்தக் கொடியின் கீழ்ப் போய்ச் சேர்ந்தார்கள்.

o விடுதலைப் புரட்சி ஒரே வடிவத்தில் இருக்க முடியாது இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் எந்தப் புரட்சி முறை கையாளப்பட்டதோ அந்த முறையை இப்போது கையாள முடியாது.

o விடுதலைவாழ்விலிருந்துதான் மக்களாட்சி பிறக்கிறது இதனால்தான் விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றுவதையே தம் இலக்காகக் கொண்டிருந்தனர் மேற்கு நாட்டார்.

o விடுதலைப் பெறுபேறை முறைகேடாகப் பயன் படுத்தும் எவரும் நிலையான நேர்மையான அரசை ஏற்படுத்த இயலாது.

o தேசம் விடுதலை வாழ்வை அடைவதுதான் முதன்மையானது. இதற்காக ஒவ்வொருவரும் தத்தம் தனிப்பட்ட உரிமைகளை, விடுதலையைக்கை விடவும் வேண்டும்.

o நாம் எல்லோருக்கும் அடிமையாய் இருக்கிறோம். பத்து எசமானர்களுக்கு நாம் அடிமைகளாய் இருக்கிறோம். நமது தேசிய விடுதலைவாழ்வு மிகவும் கொடிய முறையில் பிடுங்கப்பட்டிருக்கிறது! கட்டுப் படுத்தப்பட்டிருக்கிறது. நமது விடுதலைவாழ்வை நாம் மீண்டும் புதுப்பிக்க வேண்டுமானால், நாம் ஒன்றுபட்டவர்களாக வேண்டும். புரட்சி கரமான கொள்கைகள் இல்லாமற் போனால், நாம் வெற்றிபெற முடியாது. இந்தப் புரட்சிகரமான கொள்கைகளே, மணற் குவியல் போல் ஒன்று சேராமல் கிடக்கும் நம்மை ஒன்று சேர்க்கும் சிமென்ட்டாக அமையும்,

# கேள்வி பதில்

## ஆசிரியர் பதில்கள்

பாலன்
305, A. T. H. வீதி
சென்னை — 600 019.

1 கேள்வி - அனைத்து இயக்கங்களும் ஏன் இணையவில்லை?

பதில் - இங்கு அனைத்து இயக்கங்களும் என கருதப்படும் இயக்கங்கள் எத்தனை என கேள்விதாரர் குறிப்பிடவில்லை.

இந்தியாவில் உள்ள மக்கள் மத்தியில் பல எண்ணற்ற கோஷ்டிகள் தம்மை விடுதலை இயக்கமாக அறிமுகப்படுத்திய வண்ணம் பல சுய வியாபார முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அதாவது.

A) போதைவஸ்து கடத்துவது

B) ஏகாதிபத்திய கம்பனிகளுக்கு ஏஜண்டாக இருப்பது

C) தங்கம் கடத்துவது.

D) டொலர் விற்பது வாங்குவது

E) போலி பாஸ்போட் புத்தகங்கள் - போலி வாகன சாரதி புத்தகங்கள் - போலி விமான டிக்கட்டுகள் அச்சிடுவது. இதன் மூலமாக பிரயாண வசதிகளை செய்து கொடுக்கும் வெளி நாட்டு பயண ஏஜண்டுகளாக வேலை செய்வது.

F) கொள்ளையடிப்பது

G) பெண்களுடன் நையாண்டி செய்வது - மக்களுடன் மோதுவது

H) கடன் பெற்றுப் பின்னர் திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டு நாடுவிட்டு நாடு ஓடுவது.

இவ்வாறு பல எண்ணற்ற தொழில்கள் செய்யும் கோஷ்டிகளும் கூட "விடுதலை இயககம்" என்ற பெயரை பயன்படுத்தி வருகிறார்கள் என்பதை நாம் அறியத் தருகிறோம். ஆதலால் நீங்கள் இயக்கங்களாக அறிந்துள்ளவை அனைத்தும் விடுதலை இயக்கங்கள் அல்ல. தமிழ் ஈழ விடுதலைக்காக போராட விரும்பாத அந்தக் கோஷ்டிகளுக்கிடையே வியாபாரத் தகராறுகள் - முட்டி மோதல்கள் எப்போதும் இருப்பதால் அவை இணையவில்லை. இனியும் இணைவதென்பதும் நடக்காத ஒன்று.

ஆனால், உண்மையிலேயே இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக போராடி வரும் இயக்கங்கள் முழுமையான ஐக்கியத்தை நாடி அதில் வெற்றியும் பெற்றுள்ளன.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO ஈழப் புரட்சி அமைப்பு (ERO )- ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRL) முதலில் ஒற்றுமையை உயர்த்திப்பிடித்து 1984ல் ஐக்கியமாகின. பின்னர் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் (LTTE) இந்த ஐக்கிய முன்னணியில் இணைந்து கொண்டது.

இவ்வாறு உருவானதே ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF) ஆகும் ஆதலால் தமிழ் ஈழ விடுதலைக்காக போராடும் இயக்கங்கள் இணைந்தே உள்ளதை நீங்கள் பார்க்கலாம். ஏனைய கோஷ்டிகளை பார்த்து நீங்கள் குழப்பமடைய வேண்டாம் அனைத்து இயக்கங்களின் ஐக்கியத்தை விரும்பும் நீங்கள் தனிப்பட்ட எந்தக் கோஷ்டிகளுக்கும் உதவுவதை தவிர்த்து நம்பிக்கையுடன் ENLFஐ — வலுப்படுத்தும் வகையில் உதவும்படி வேண்டுகிறோம்.

S. முகமது அலி
சரோஜினி நினைவு மேல்
நிலைப்பள்ளி
உரப்பனைவிளை
கன்னியாகுமரி மாவட்டம்.

2 கேள்வி - விமானத் தாக்குதலை நடாத்தும் சிறீலங்கா அரசை எதிர்க்கும் ஆயுதபலம் நம்மிடம் போதிய அளவு உள்ளதா?

அளவுக்கு அதிகமாக உள்ளது ஆனால் அதனை கையாளும் வகையிலேயே தான் அனைத்தும் தங்கியுள்ளது. நாம் இங்கு குறிப்பிடுவது இலங்கைத் தமிழ் பேசும மககளது சக்தியையும் அவர்களது - நேச அணிகளான முற்போக்கு மனித இனம் மற்றும் முற்போக்கு அரசுகளின் உதவிகளையும். முற்போக்கான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உறுதியான தலைமையின் கீழ் தமிழ் பேசும் மக்கள் அணிவகுக்கப்பட்டு, அமைப்புக்குட்படுத்தப்பட்டு, ஆயுதபாணியாக்கப்பட்டு முற்போக்கு மனித இனத்தின் ஆதரவையும் நாம் பெற்றுக் கொள்வோமாயின், ஏகாதிபத்திய அடி வருடிகளது விமானப்படைத் தாக்குதலை மட்டுமல்ல அவர்களது அணு ஆயுத மிரட்டலையும் முறியடிப்போம்.

ஆனால், மிகவும் மரபு வழிப்பட்ட முதலாளியத் தன்மை வாய்ந்த மிகவும் கிரமமான போர் நடாத்தலே சில பிற்போக்குவாத அமைப்புகள் முனைகின்றன. இதுமட்டுமல்ல, இப்பிற்போக்குவாத அமைப்புகள் மக்களை மாட்டுமந்தைகளாக கருதி தமது அமைப்புகளுக்கு பலம் சேர்க்கும் வகையில் மக்களை வெறுமே ஆதரவு என்ற ரீதியிலேயே வைத்திருக்கின்றன மக்களது புரட்சிகர குணம்சங்களை திசை திருப்பும் வகையில் அவர்களுக்கு இனவாதத்தை ஊட்டுவதும் பிற அமைப்புகள் மீது காழ்ப்புணர்ச்சியை வளர்ப்பதும் அவர்களுக்கு கைவந்த கலையாகி விட்டது.

இப்படியாக, முற்போக்கு முலாம் பூசிக் கொண்டு பிற்போக்கு வாதிகளாக செயல்ப்படுவோரின் நுகத்தடியில் சிக்குண்டு கிடக்கும் மககளை மீட்டெடுத்து மக்கள் யுத்தப்பாதையில் ஏகாதிபத்திய போரை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

மக்கள் யுத்தப் பாதையில் ஏகாதிபத்திய போரை எதிர்கொண்ட அமைப்புக்களே இதுவரை வெற்றியை பெற்றுள்ளன. 20ம் நூற்றுண்டில் நடைபெற்ற வியத்நாம் மக்கள் போராட்டம் இதற்கு நல்ல உதாரணமாகும். ஜப்பானிய பாசிஸ்டுக்களையும் - பிரெஞ்சு காலனியா திக்கவாதிகளையும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளையும் வியத்நாம் மககள ''மக்கள் யுத்தத்தின்'' அடிப்படையிலேயே முறியடித்து தமது நாட்டின் விடுதலையை வரலாற்று சிறப்புமிக்க பக்கங்களால் நிரப்பினுர்கள்.

அமெரிக்கா வியத்நாம் ஆக்கிரமிப்பில் மட்டும 6, 00, 000 துருப்புக்களை பயன்படுத்தியது. தனது 7 வது கப்பற்படையில் மாத்திரம் 40, 000 துருப்புக்சளை நிலை நிறுத்தியது. மாதாந்தம் 2 தொன் நிறையுள்ள ஆயுதங்களை அனுப்பியது 60 லட. தொன் நிறையுள்ள எரிகுண்டுகளை வியத்நாம் மண்ணில் வீசினுர்கள். வியத்நாம் ஆக்கிரமப்பிற்கு 1966 - 1967 நிதியாண்டில் 24.5 பில். டொலரையும் — 1968 - 1969 நிதியாண்டில் 26 பில். டொலரையும் செலவழித்தார்கள்.

ஆனுல் இறுதியில் வெற்றி பெற்றது யார்?

அமெரிக்கா, முதலாவது உலகப் போரிலும் பின்னர் கொரிய யுத்தத்திலும் (1950 — 1953) இழந்த துருப்புக்களை விட வியத்நாமில் 2, 80, 000 துருப்புக்களை பலிகொடுத்தது. மாதத்திற்கு 70 போர் விமானங்களை அமெரிக்கா இழந்தது.

''ஒரு சிறிய பரந்த பரப்பில்லாத - மக்கள் தொகை அதிகமில்லாத - பொருளாதார வலிமை இல்லாத நாடு திட மனத்துடன் சரியானபுரட்சிகர மார்க்கத்தை கொண்டு - நாடு தழுவிய ஆயுத எழுச்சி மற்றும் மக்கள் யுத்தம் பற்றிய மார்க்சிய- லெனினிய கோட்பாட்டை தங்கள் நாட்டுக்குரிய வகையில் பிரயோகித்து - முற்போக்கான மனித இனம் மற்றும் சகோதர சோஷலிஸ நாடுகளின் ஒத்துழைப்பு ஆகியவற்றுடன் முதன்மையான ஏகாதிபத்திய அரசான அமெரிக்கா உள்ளிட்ட வலுவான ஆக்கிரமிப்பாளரை முறியடிக்க முறியும்'' என்ற ஒளிரும உண்மையைஉலக மக்களுக்கு புலப்படுத்தினுர்கள் வியத்நாம் மக்கள்.

சிறிலங்கா அரசின் போர் விமானத்தாக்குதலை முறியடிக்க தமிழ் ஈழ மக்களது அனைத்து சக்திகளை ஒன்றிணைப்பதும் முற்போக்கு அரசின் உதவிகளை [illegible]ன் தெடுப்பதுமே எமது இன்றைய போராட்டமாகும். இவற்றை நாம் சாதிப்போமாயின் நாம் வெல்லப்பட முடியாதவர்களாகிவ்டுவோம்.

இரா. பாஸ்கர்

ரத்தம்பட்டி

இராஜபாளையம்

காமராஜர் மாவட்டம் - 626 102.

3 விடியல் சந்தா விபரங்கள் (வருட, அரைவருட) தெரிவிக்கவும்.

வருட சந்தா ரூபா 25 ஆகும். அரைவருட சந்தா ரூபா 12 ஆகும். தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு மக்கள் செலுத்தும் பங்களிப்பாகவே இத்தொகையை நாம் கருதுகிறேம்.

4 (இயக்கத்தின் நிதி நெருக்கடியை சமாளிக்கவும் - அனுவசியச் செலவுகளைக் குறைக்கவும் என்ன நடவடிக்கையை ரெலோ (TELO) கையாள்கிறது?

நாம் நிதி நெருக்கடியை சமாளிக்க நாளாந்தம் கடும் முயற்சியில் இறங்கியிருக்கிறேம். நாடகம் - பொருட்காட்சி, வீடியோ படக்காட்சி ஆகியவற்றை தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் பற்றி பிரச்சாரம் செய்யும் வகையில் அமைத்து நடாத்தி வருகிறேம் இவற்றின் மூலம் நாம் கோடிக்கணக்கான மக்களின் பேராதரவை பெற்று நிதி வசூலித்து வருகிறேம். சகல வெளிநாடுகளிலும் கூட இத்தகைய நிகழ்ச்சிகள் மூலம் நிதி வசூலிக்கிறேம். இது தவிர கோழிப்பண்ணை, கடற்தொழில், சிறிய உற்பத்தி சாலைகள் ஆகியவற்றை நிர்மாணித்து எமது தோழர்களின் உழைப்பையே பயன்படுத்துகிறேம். மேலும் கூட்டுப்பண்ணை அடிப்படையில் உணவு பொருட்களை பெருக்கவும், தொழில் நுட்பக் கல்லூரிகளை அமைக்கவும், தமிழ் ஈழ விடு[illegible]டம் பற்றிய திரைப்படம் தயாரிக்கவும் உத்தேசித்துள்ள அடிப்படையில் எமது போராளிகளுக்கு பயிற்சி அளித்து வருகிறேம், இது போன்ற பல திட்டங்களையுப் செயல்ப்படுத்தவுள்ளோம். நியாய விலைக் கடைகளை நடாத்துவதன் மூலம் மக்களுக்கு நியாய விலையில் பொருட்களை விநியோகித்து பொருட்களின் விலையை கட்டுப்படுத்துவதுடன் - தட்டுப்பாடான பொருட்களை பங்கீட்டு அடிப்படையில் விநியோகித்து வருகிறேம். மேலும் மொத்தமாக பொருட்களை வாங்கி எமது தேவைகளை பூர்த்தி செய்வதால் செலவை சிக்கனப் படுத்தவும் செய்கிறேம்.

எமக்கு வேண்டிய ஆயுதங்களில் சிலவற்றை நாமே உற்பத்தி செய்ய கடும் முயற்சி எடுத்து வருகிறேம்.

உலக நாடுகளில் உள்ள புரட்சிகர அமைப்புகளை வென்றெடுக்கவும் - மனித நேயத்தை மதிக்கின்ற நாடுகளின் உதவியை வென்றெடுக்கவும் நாம் முயற்சித்து வருகிறேம்.

அனுவசிய செலவுகள் என நாம் கருதக்கூடியவற்றை கூடியளவு தவிர்த்தே வருகிறேம். ஆனுல் எமக்கு அத்தியாவசியமானவை சிலருக்கு அனுவசிய செலவுகளாக தெரியலாம். ஏனெனில், அத்தியாவசிய தேவைகள் என்பது நபருக்கு நபர் வேறுபடக் கூடியதாகும்.

ஆனுல் நாம் தவறு செய்யாதவர்கள் என்பதை கூறவில்லை. தமிழ்நாட்டில் உள்ள சூழ்நிலைகள் சில தோழர்களை தவருன வழிக்கு இட்டுச் செல்கின்றன; அனுவசிய செலவுகளை மேற்கொள்ளும்படி செய்கின்றன. இவற்றிற்கு தக்க நடவடிக்கை எடுத்து எமது அனுவசிய செலவுகளை குறைத்தே வருகிறேம்.

5) அமெரிக்காவை கடுமையாகத் தாக்கும் தாங்கள் திம்பு பேச்சுவார்த்தைக்கும்- இயக்க ஆலோசனைக்கும் சத்தியேந்திரா சந்திரகாசன் ஆகியோரின் உதவி பெற்றது சரியா?

மேற்கூறப்பட்ட கேள்வியில் உள்ளடங்கியிருக்கும் விடயங்களாவன; ஒன்று- சந்திரகாசன் சத்தியேந்திரா அமெரிக்க ஏஜண்டுகள் என்பது - இரண்டாவது, மேற்கூறிய இருவரும் ரெலோ (TELO) இயக்கத்தின் ஆலோசகர்கள் என்பது மூன்ருவது நாம் அமெரிக்காவுக்கு எதிரானவர்கள் என்பது?

இவற்றை தனித்தனியாகப் பார்ப்போம்.

முதலாவதாக, இலங்கைத் தமிழர்களது சரித்திர பூர்வமான அரசியல் நடவடிக்கைப் போக்குகளை கவனிப்போமாயின், பிரிட்டிசாரின் காலனியாக இருந்த காலத்தில் தமிழர்களது அரசியல் பிரதிநிதியாகவும் முழு இலங்கை மக்களது அரசியல் பிரதிநிதியாகவும் இருந்தவர் சேர் - பொன் - அருணுசலம். இவர் நிலப்பிரபுகளின் நலனை கருத்திற் கொண்டவராகவே இருந்தார். இவரை தலைமையாக கொண்டிருந்த அகில இலங்கை காங்கிரஸ் கட்சியானது — இலங்கை சுதந்திரம் பெற்றதாக சொல்லப்படும் காலத்தில் உடைந்து ஐக்கிய தேசிய கட்சியாகவும் (UNP) அகில இலங்கை தமிழ் காங்கிரசாகவும் உருவாகின. இவ்வாறு சிங்கள மக்களுக்கு ஐக்கிய தேசிய கட்சியாகவும் தமிழர்களுக்கு அகில இலங்கை தமிழ் காங்கிரசாகவும் உருவாகியதற்கு பிரிட்டிஷார் ஊட்டிய பிரித்தாளும் சூழ்ச்சியே காரணமாகும்.

இப்பிரித்தாளுகை சிங்கள மத்தியில் மிகத் தீவிரமாக பரப்பப்பட்டது. இதனுல் 1956ம் ஆண்டு தொடக்கம் தமிழ் இனப் படுகொலைகள் உருவாகின.

சிங்கள மக்கள் மத்தியில் தீவிர இனவாதம் பரவியதால் UNP கட்சியைவிட தீவிர இனவாத கட்சியாக தோன்றியதே சிறிலங்கா சுதந்திர கட்சி (SLFP). இதனுல் தமிழர்கள் மத்தியிலும் தீவிர இன உணர்வு உள்ள கட்சி தேவையாகி விட்டது. இதனுல் உருவாகியதே தமிழரசுக் கட்சி.

தமிழர்கள் மீதான ஒடுக்குமுறை அதிகரிக்கவே தமிழ் இளைஞர்களது கல்வி பாதிக்கப்பட்டு தமிழர்கள் மத்தியில் வேலையின்மை அதிகரிக்கவே இந்த இளைஞர் மாணவர் அமைப்புக்கள் தமக்கென ஒரு தனிநாடு வேண்டும். அது தமிழ் ஈழமாக வேண்டும் என்று தீர்மானித்தனர். இத்தகைய இளைஞர் மாணவர் அமைப்புகள் தான் இன்று தமிழ் ஈழ விடுதலைக்காக தீவிரமாக போராடிவரும் இயக்கங்களாக உள்ளன.

இவ்வாறு அவ்வப்போதிருந்த தமிழர்களது அரசியல் தலைவர்கள் எடுத்த ஒவ்வொரு நடவடிக்கையும் இயல்பாகவே அமெரிக்காவின் சதிவேலைகளுக்கு அடி கொடுப்பதாக இருந்தது. ஆனுல் என்றுமே அவர்கள் நேரடியாக அமெரிக்காவை எதிர்த்துப் பேசியது இல்லை. அவ்வப்போது அமெரிக்காவிடம்கூட உதவி பெற முடிந்தபோது அதனைப் பெற்றிருக்கிருர்கள், ஆனுல் அவ்வாறு உதவுவதன் மூலம் தமிழர்களது அரசியல் பிரதிநிதிகளை விலைக்கு வாங்கி தமிழர்களது அரசியல் போக்கை மாற்ற முயற்சித்து இதுவரை அமெரிக்கா வெற்றி கண்டது இல்லை. தமிழர்களது இருபெரும் கட்சிகளான தமிழரசு, தமிழ் காங்கிரஸ் ஆகியன அமெரிக்க சார்புடைய நிலையிலேயே தமது ஆரம்பக் கோட்பாடுகள் வழியில் அதாவது தீவிரவாத வழியில் நடைபோட முடியாமல் இருந்தனர். இந்நிலைமைகளே அவர்களை காந்திய வழியில் போராட்டங்களை நடத்தும்படி நிர்ப்பந்தித்தது.

அப்படி இருந்த போதிலும் கூட மாணவர் இளைஞர் அமைப்புக்கானது பின்னணியில் மக்கள் அணி திரண்டதால்" தமிழரசு-தமிழ்க் காங்கிரஸ் ஒன்ருகி கூட்டணியாக TULF) உருவெடுத்து தமிழ் ஈழக்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோரிக்கைக்கு போராடுவதாக ஒப்புக்கொண்டு தம்மால் சகல மக்களையும் கவரும்படி செய்தனர். ஆனால் காந்திய வழியில் மட்டும் போராடுவோம் என்றனர்.

இப்படியாக, அமெரிக்க சார்புடையவர்களாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினரை பின்பற்றி வந்தவர்களே சந்திரகாசன்-சத்தியேந்திரா போன்றவர்களும்.

ஆயினும் இன்று சத்தியேந்திராவோ அல்லது சந்திரகாசனோ TULFன் பின்வாங்கும் போக்குகளை எதிர்த்து விலகியவர்களாக, தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு தம்மாலியன்ற உதவியை செய்ய முன்வந்து இருப்பவர்களாகவும் உள்ளனர். அவர்களது இந்த முயற்சியே அமெரிக்க ஏகாதிபத்திய சதிகளுக்கு எதிரானது தான்.

இயக்கங்களின் ஐக்கியத்திற்காகவும்-தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு இந்திய அரசின் உதவியை திரட்டுவதிலும் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு தங்களது பங்களிப்பை செய்து வந்தனர்.

இதனை காணச் சகிக்க முடியாதவர்கள் எமக்கு மொட்டை அடிக்கும் செயலாக அவர்கள் அமெரிக்க ஏஜண்டுகள் எனக் கூறி வருகிறார்கள். ஒரு தனி மனிதனின் தனிப்பட்ட கருத்துக்கள் குணங்களைவிட, அவன் சமூகத்தில் எத்தகைய நடவடிக்கைகளை செய்கிறானோ அதுதான வலிமை வாய்ந்ததாகும் என்பதை அவர்கள் அறியாதவர்கள்.

அத்தகைய ஒரு உதவியாகத்தான் எமது கருத்துக்களை எடுத்துக்கூற சத்தியேந்திரா திம்பு பேச்சு வார்த்தைக்கு அனுப்பப்பட்டார். திம்பு மாநாட்டில் சிறிலங்கா அரச பிரதிநிதிகளை கதிகலங்கச் செய்தவர் சத்தியேந்திரா என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சத்திரகாசன் எமது இயக்கத்தின் ஆலோசகராக என்றுமே இருந்ததில்லை. சத்தியேந்திராவும் அவ்வாறே. சந்திரகாசன் ''தமிழ் ஈழ பாதுகாப்பும் புனர்வாழ்வுக்குமான கழகம்'' (PROTEC) எனும் பெயரில் உள்ள ஒரு கழகத்தின் தலைவராக இருந்து சுயமாக இயங்கி வருபவர்,

மற்றது இப்போது தீவிரமாக தமிழ் ஈழ விடுதலைக்காக போராடி வரும் இயக்கங்கள்— 15 வருடங்களுக்கு முன் எழுச்சி பெற்று வந்த இளைஞர் மாணவர்கள் அமைப்புகள் தான். இவை ஆரம்பத்தில் அமெரிக்காவை தாக்கும் நோக்கத்தை கொண்டிருக்கவில்லை. தமிழ் தேசிய இன உணர்வும், இலங்கைக்கு உட்பட தேசியவாதமும் தான் அவர்களது அரசியலாக இருந்தது. ஆயினும் சிறிலங்கா அரசுக்கு தமிழர்களை ஒடுக்கவும் அழித்து ஒழிக்கவும் வேண்டிய இராணுவ உதவிகளை செய்ய முற்பட்டபோதுதான் அதனை எதிர்க்கத் தொடங்கினர். இன்று நாம் சிறிலங்கா இராணுவத்தை தோற்கடிக்கு முகமாக கொடுக்கும் ஒவ்வொரு இராணுவ தாக்குதலும் அமெரிக்காவுக்கு கொடுக்கும் பலத்த அடியாகவே அமைந்துள்ளது. இந்த ரீதியிலேயே நாம் அமெரிக்காவை கடுமையாக எதிர்த்து தாக்குபவர்களாக உள்ளோம்

ஆனால் நீங்கள் இயக்கங்களாக கருதக்கூடிய சில கோஷ்டிகள் தமிழ் ஈழ களத்தில் எத்தகைய முறையிலும் சிறிலங்கா அரசுக்கு அடிகொடுக்கும் முயற்சியில் இறங்காமல் வெற்று பிரச்சாரங்கள் மூலம் அமெரிக்காவுக்கு எதிரான வெறும் சொல்வீச்சுக்களை அடிப்பதுடன் போராடும் இயக்கங்களை அமெரிக்க சார்பானவை என நிருபிப்பதில் கடும் முயற்சியில் இறங்கியுள்ளன. அத்தகைய கோஷ்டிகள் தான் அமெரிக்காவுக்கு சார்பான நடவடிக்கையில் இறங்கியுள்ளன என்பதை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து கொள்ள வேண்டும். மேற்போக்காககேள்விப்படும்செய்திகளை அவ்வறே அறியாமல் ஏற்றுக்கொள்ள வேண்டாம். ஏனெனில் உங்கள் விருப்பம் அமெரிக்காவை எதிர்க்க வேண்டும் என இருந்தாலும் உங்கள் சிந்தனைக் குழப்பம் அமெரிக்காவுக்கு உதவும் வகையில் அமைந்துவிடும்; எச்சரிக்கை:

வாசகர்கள் தங்களது கேள்விகளை விடியல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



## (மட்டுநகர் பிராந்திய அமைப்பாளர்)

# தோழர் கருணாவுக்கு வீர வணக்கம்



மக்களுக்காக உழைத்து

மக்களுக்காக மாண்ட தோழனே

தமிழ் ஈழ மண்ணில் சமவுடமைக்

கொடிதான் உன்நினைவுகளாய் பறக்குமடா.

மட்டக்களப்பு மாவட்டம் களவாஞ்சிக்குடியை பிறப்பிடமாகக் கொண்ட தோழர் கருணா. இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் எதிர்தோக்கும அனைத்து ஒடுக்குமுறைகளையும் தமிழ் ஈழ விடுதலையின் மூலம் அகற்றிடும் நோக்கத்துடன் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (TELO) உறுப்பினரானான்.

தனது இலட்சியங்களை அனைத்து தமிழ் பேசும் மக்களது ஆயுதப் போராட்டத்தின் மூலமே வென்றெடுக்க முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்ட தோழர் கருணா மட்டுநகர் பிராந்தியத்தில் மக்கள் அமைப்புக்களை கட்டும் நோக்கத்துடன் அல்லும் பகலும் உழைத்தான். மக்களுடன் அவன் ஒன்றிணைந்து போராடும் நோக்கும் - எதிரிகளையும், நண்பர்களையும் இனம் காணும் ஆற்றலும் - தீவிர போர்க்குணம்சமும் - எளிமையான வாழ்வும் அவனை மட்டுநகர் பிராந்திய அமைப்பாளனாக்கியது.

கோபாலபிள்ளை அருளம்மா தம்பதியருககு 3 வது மகனாக 15-08-1959ல் பிறந்த தோழர் கருணா (கோபாலபிள்ளை அருள் ஞானசுந்தரம்) தனது ஆரம்பக் கல்வியை பட்டிருப்பு மகாவித்தியாலயத்திலும் உயர் கல்வியை சாகிரா கல்லூரியிலும் பயின்றான். எமது அமைப்பின் தோழர்களால் அன்பாக அண்ணாச்சி என்றழைக்கப்படும் தோழர் கருணா மக்கள் விடுதலைக்காக எமது அமைப்பின் பணிகளை மேற்க்கொண்ட போது ஒருமுறை இராணுவ வெறியர்களின் கொலைக்கரங்களில் சிக்குண்டு, அவர்களது வதை முகாமில் சிறைப்பட்டான். எனினும் அந்த நாசகாரிகளின் பிடியில் இருந்து மயிரிழையில் உயிர்தப்பி தமிழ் ஈழ விடுதலையை வென்றெடுக்க மக்கள் மத்தியில் எமது அமைப்பின் பணிகளை தீவிரமாக மேற்க்கொண்டான்.

இவனை மீண்டும் தீர்த்துக்கட்ட அந்தக் கொலைகாரக் கும்பல் நாவரண்டு அலைந்தபோது அவர்களது பிடியில் இருந்து பலமுறை தப்பினான். ஆனால் கடந்த 09-02-1986ல் அமைப்பு பணிகளை மேற்கொண்டிருந்தபோது சிறீலங்கா அரச பேரினவாதத் துப்பாக்கி குண்டுகளுக்கு இரையாகிப் போனான்.

இவனது இழப்பு எமது அமைப்பிற்கு மாத்திரமல்ல, அனைத்து ஒடுக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

இந்த வீரமறவனின் இலட்சிய பயணத்தை மேலும் தொடர்ந்து முன்னெடுத்து செல்ல உறுதிபூண்டு வீரவணக்கத்தை செலுத்துகிறது தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ரெலோ (TELO) போராளிகள் தாக்குதலில்

# 5 இராணுவத்தினர் பலி, தோழர் கிருபா வீரமரணம்

தரகு முதலாளித்துவ UNP அரச இராணுவத்தினருக்கு எதிராக தொடர்ச்சியான தாக்குதலை மேற்கொண்டு வரும் ரெலோ (TELO) போராளிகள் கடந்த 18-03-1986ல் தாக்குதலை மேற்கொண்டதில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதல் பரந்தன் – புதுக்குடியிருப்பு பாதையில் உள்ள முரசுமோட்டைக்கு அருகாமையில் நடைபெற்றது.


பரந்தன் புதுக்குடியிருப்பு பாதை வழியாக இராணுவத்தினர் வருகின்றனர் என்ற தகவலை அறிந்த ரெலோ போராளிகள் அவர்களை தாக்கும் முகமாக முரசுமோட்டைக்கு அருகாமையில் மக்களது ஒத்துழைப்புடன் காத்திருந்தனர்.

ஆனால் இராணுவத்தினரில் சிலர் போராளிகளை போல் உடையணிந்து தமது ஆயுதங்களை சேட்டுக்குள் மறைத்து வைத்த வண்ணம் நடைபவனியாக வந்தனர். சிறிது தூர வித்தியாசத்தில் இராணுவ வண்டிகளில் இராணுவத்தினர் திரளாக வந்தனர். இராணுவத்தினர் போராளிகளைப் போல் உடையணிந்து நடைபவனியாக வந்ததைக் கண்ட பொது மக்கள் அவர்களும் போராளிகள் தான் என நினைத்து அங்கேயும் சில போராளிகள் வருவதாக காத்திருந்த ரெலோ (TELO)- போராளிகளுக்கு தெரிவித்தனர். இதனையடுத்து ரெலோ போராளிகள் அவர்களை பார்வையிட சென்றனர்.

இராணுவத்தினருக்கு அருகாமையில் சென்ற ரெலோ போராளி தோழர் கிருபா அவர்களை நோக்கி நீங்கள் யார் எனக் கேட்டபோது அவர்கள் பதில் கூறாததால், சந்தேகம் அடைந்த தோழர் கிருபா அவர்களை சரணடைய சொன்னபோது, 3 பேர் கைகளை உயர்த்தி சரணடைய முற்பட்ட போது அவர்கள் உள்ளே அணிந்திருந்த இராணுவ உடை தெரிந்ததால் தோழர் கிருபா தனது தற்பாதுகாப்பிற்காக இராணுவத்தினரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இவ்வேளையில் பின்னால் வந்த இராணுவ வண்டிகளும் அவ்விடத்தை அடைந்தன. இதையடுத்து எமது தோழர்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. இதில் தோழர் கிருபாவின் வயிற்றிலும் - காலிலும் அந்தக் கொலைகாரர்களின் நச்சுக் குண்டுகள் பாய்ந்துவிட்டன. இவ்வேளையில் பின்வாங்க முடியாத நிலையில் இருந்த தோழர் கிருபா தன்னைத் தானே சுட்டு வீரமரணமடைந்தான்.

இராணுவ வண்டிகளை நோக்கி ஏனைய ரெலோ (TELO) போராளிகள் ராக்கெட் மூலம் தாக்குதல் நடத்தினர். ரெலோ போராளிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவம் பின்வாங்கி ஓடிவிட்டது. இச்சம்பவத்திலேயே 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.



இராணுவ பயிற்சியில் ரெலோ (TELO) போராளிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்